புசிக்க உணவு, புளியங்கொட்டை!

திராவிடநாடு

மலர் 9 | 13 8 50 | இதழ் 7

இலங்கை 15 சதம்] விலை அணா இரண்டு [மலாய் நாடு 12 காசு

பொன் விளைந்த பூமியிலே பரிதாபம்!

நெசவாளி மக்களின் கதியற்ற நிலை!

கண்ணீர் கொந்தளிக்கும் காட்சி

சேலம் சித்தையன் வேண்டுகோள்

புளியங்கொட்டை—வேண்டுவாரற்ற ஒரு பொருள்! இன்று, அதுவாவது கிடைக்காதா? என்று ஏங்கி நிற்கின்றனர் மக்கள். சேலத்தின் தெருவீதிகளிலே புளியங்கொட்டை வியாபாரம் நடைபெறுவதைக் காட்டுகிறது, பக்கத்திலேயுள்ள புகைப்படம். சேலத்து மக்களில் பெரும்பான்மையோர் கைத்தறி நெசவாளர்கள். அவர்கள் வாழ்விலே புயலும் கொந்தளிப்பும் ஏற்பட்டுவிட்டது. பல குடும்பங்கள் பட்டினி! பரிதாபம் நிரம்பிய இவ்வேதனையை விளக்கி திராவிட முன்னேற்றக் கழக செயற் குழு உறுப்பினரும் கைத்தறிநெசவாளர்களின் குறைகளைக்களைய போராடுபவருமானதோழர் சித்தையன் 'இருப்பதா? இறப்பதா?' என்று கேட்டு, கீழ்க்கண்ட தகவலை அனுப்பியுள்ளார். பல குடும்பங்கள் புளியங்கொட்டையை ஊறவைத்துத் தின்று ஜீவிக்கின்றனவாம்! உணவுப் பொருள் கிடைக்கவில்லை கிடைத்தாலும் வாங்க கையில் வக்கில்லை, வழியில்லை, காசில்லை! இந்த இக்கட்டான நிலையில் கையில் கிடைக்கும் காலணாவையும் அரையணாவையும் கொண்டு புளியங்கொட்டை வாங்கி வயிற்றை நிரப்புகிறார்களாம்! கேட்கச் சகிக்கவில்லை—பொன் விளைந்த நாடாம் இது புசிக்கச் சோறில்லையே என்று புளியங்கொட்டையைத் தேடுகிறார்கள். கூழ் காய்ச்சி பசையாகப் பயன்படுத்தக்கூட இலாயக்கற்றது என்று கூறப்படும் புளியங்கொட்டை—புசிப்பதற்கு! ஐயோ, தமிழகமே—உனக்கு இத்தகைய கதியா? உன் புதல்வர்களுக்கா இத்தகைய சோதனை? இதைக் களையாத சர்க்காரைத் தாங்க வேண்டிய கேடுகெட்ட நிலைக்கா உனது வாழ்வு வரவேண்டும்! (ஆ—ர்)

"சண்டைக்குப் பிறகு இந்நாட்டில் ஏற்பட்ட பலதிறப்பட்ட பொருளாதார ஏற்றத் தாழ்வினால், இன்றைய தினம் மிகவும் பாதிக்கப்பட்டிருப்பது கைத்தறித் தொழில்தான். தென்னாட்டைப் பொறுத்தவரை விவசாயத்துக்கு அடுத்த மிகப் பெரிய குடிசைத் தொழிலான இத்தொழிலில் லட்சக்கணக்கான குடும்பங்கள் தங்கள் வாழ்க்கையை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். "ஆறு மாதம் நூலும் பாவிலும்-ஆறு மாதம் வேலும் பாவிலும்" என்னும் பழமொழிக்கிணங்க, தொழிலில் சில நாள் செழிப்புக்காணுவதும், திடீரென்று மந்தநிலை ஏற்பட்டுத் தொழிலாளர்கள் அவதிப்படுவதும், அவ்வப்போது காணப்படுகிற ஒரு சாதாரண சம்பவம் என்றாலும், கைத்தறி நெசவாளர்களுக்கு இப்போது ஏற்பட்டிருப்பதுபோன்ற ஒரு நெருக்கடியும் அவதியும் வேறு எப்போதும் ஏற்பட்டதில்லை, சர்க்காரின் கண்ட்ரோல் முறைகளினால் நெசவுத் தொழிலுக்குப் போதுமான நூல் கிடைப்பதில்லை, கிடைக்கிற நூலைக் கொண்டு தயாரிக்கப்படுகிற துணிகளுக்குக்கிராக்கி இல்லை. எல்லா ஊர்களிலும் கைத்தறி ஜவுளி தேங்கிக் கிடக்கிறது, புள்ளிக்காரர்கள் (Master Weavers) சாதாரண மார்க்கட்டில் கிடைக்கிற நூல் போக தங்கள் தறிகளுக்குத் தேவையான அதிகப்படியான நூலைக் கள்ள மார்க்கட்டில் ஒன்றுக்கு இரண்டு விலை கொடுத்து வாங்கி, அதனால் தயாரிக்கப்படும் துணிகளுக்கு கிராக்கி இல்லாமையால் ஒரு சில புள்ளிக்காரர்கள் தவிர, மற்றவர்களெல்லாம் தங்கள் நெசவுக்காரர்களை விலக்கிவிட்டார்கள். தங்களிடம் ஏற்கனவே இருக்கும் துணிகளை விற்கமுடியாமல் திண்டாடுகிறார்கள். எனவே இதுவரை புள்ளிக்காரர்களை அண்டி தொழில் செய்து பிழைத்துவந்த பல்லாயிரக்கணக்கான ஏழை நெசவாளர்கள், தங்கள் பெண்டு பிள்ளைகளைக் காப்பதற்கு வழியறியாமல் திண்டாடித் தெருவில் நிற்கின்றனர். பல குடும்பங்கள் தங்கள் தங்கள் ஊர்களைவிட்டு குழந்தை குட்டிகளோடு அகதிகள்மாதிரி வெளியூர்களில் சுற்றுகின்றனர். மானத்திற்கு அஞ்சிய சிலர், கீழ்ப்பவானி அணைக்கட்டு, துங்கபத்திரா திட்டம் ஆகியவைகளில் மண் சுமந்து பிழைத்துக்கொண்டிருக்கின்றனர். நிலைமை நாளுக்கு நாள் மோசமாகிக்கொண்டே வருகிறது. இதே நிலை நீடித்தால் எதிர்காலம் எப்படியிருக்கும் என்று எண்ணும்போதே திகில் ஏற்படுகிறது; நம் மாகாணத்தில் எல்லாப் பகுதிகளிலுமுள்ள கைத்தறி நெசவுக்காரர்களின் பொதுவான நிலை மேலே குறிப்பிட்டதுபோன்றுதான் இருக்கிறது என்றாலும், சேலம் ஜில்லாவில் குறிப்பாகச் சேலம் நகரத்தில், நெசவுக்காரர்களுடைய நிலைமை பரிதாபத்தின் உச்ச நிலையை அடைந்துவிட்டது. சென்ற எட்டு ஒன்பதுமாத காலமாகவே நாளுக்கு நாள் கீழ்த் திசையிலேயே போய்க்கொண்டிருக்கிறது. அவ்வப்போது நெசவுக்காரர்கள் உள்ளூர் அதிகாரிகளிடம் தங்கள் நிலைமையை எடுத்துக் கூறியவண்ணம் இருந்தனர். ஸ்தல அதிகாரிகளும் இங்குள்ள நிலைமையை நிச்சயம் சர்க்காருக்குத் தெரியப்படுத்தியிருக்கிறார்கள் என்று நம்புகிறேன். இருந்தும் சர்க்கார், இதில் எந்தவித முயற்சியும் எடுத்துக்கொண்டிருக்கிறார்களென்று சொல்லமுடியாது. உணவு தானியங்கள் கிடைப்பதில்லை. மற்ற வாழ்க்கைக்குத் தேவையான சாமான்களின் விலையோ ஒன்றுக்கு ஐந்து, ஆறு மடங்கு ஆக ஏறிவிட்டது. நெசவுக்காரர்களுக்கோ தொழிலே இல்லை என்றால், இத்தொழிலை நம்பி வாழும் மக்கள் என்ன செய்வது என்பதை சிந்தித்துப் பாருங்கள். பல நெசவுத் தொழிலாளிகளின் வீடுகளில் அடுப்பெரித்தே நாட்கள் பல ஆகிவிட்டன. ஊறவைத்த புளியங்கொட்டையை நாட்கணக்கில் தின்று காலங் கழிக்கவேண்டிய மிகக் கேவல நிலையை நெசவாளர்கள் அனுபவித்து வருகின்றனர்.

சர்க்கார் விரைவில் இதற்குப் பரிகாரம் தேடாவிட்டால் பட்டினிச் சாவு எண்ணிக்கை நிச்சயம் வளர்ந்தே தீரும். நிரந்தரமான பரிகாரம் தேடுவதற்குச் சம்மந்தப்பட்ட வியாபாரிகள் தொழில் சங்கங்களைச் சார்ந்தோர், நிபுணர்கள் ஆகியவர்களைக் கலந்து ஒரு திட்டம் வகுக்க வேண்டும். ஆனால் திட்டம் வகுத்து வேலை செய்வதற்கு முன் தற்காலிகமான பரிகாரம் ஏதாவதொன்றைச் செய்தாகவேண்டும் — நூல் விநியோகத்திலிருக்கிற குறைபாட்டை நீக்கி சாதாரண விலையில் தாராளமாக நூல் கிடைப்பதற்குப் போதிய வசதி செய்யப்பட்டது என்றால் அது தற்காலிகப் பரிகாரம் என்று கருதுகிறேன். இந்த ஜில்லா சம்மந்தப்பட்டவரை எல்லா ரகங்களிலுமாக சுமார் 4000 பேல் நூல் தேவைப்படுகிறது. ஆனால் சென்ற ஐந்து மாத காலமாக இந்த ஜில்லாவுக்கு கிடைத்திருக்கிற நூல் எவ்வளவு என்று பாருங்கள்.

மார்ச்சு	499	ஏப்ரல்	422
மே	370	ஜூன்	981

இங்ஙனமிருக்கே நூல் கிடைத்து வந்ததினால், தங்களின் அவசிய தேவைக்குக் கள்ள மார்க்கட் மட்டமதிப்பு விலைக்கு கொடுத்து வாங்கித் தீரவேண்டிய நிலைக்கு புள்ளிக்காரர்கள் தள்ளப்படுகிறார்கள். இப்படி அதிக விலையில் வாங்கி தயாரிக்கப்படும் ஜவுளிக்கு சரியான விலையும் விற்பனையும் இல்லை. சாதாரண கண்ட்ரோல் விலைக்கு தாராளமாக நூல் கிடைத்தென்றால், துணி விலைபடக்கம் இப்போதிருப்பதைக் காட்டிலும் மிகவும் குறையும். ஓரளவுக்குத் தற்காலிகமாக நெசவுகள் ஓடச்செய்ய வசதியாயிருக்கும், ஆகவே, உடனடியாகத் தாராள நூல் விநியோகத்துக்கு சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா?"

*

இயக்க வீரரை இழந்தோம்!

சென்னை வி. டி. பெரியசாமி மறைவு

தமிழின் சின்னம் போன்ற உருவம், சிரிப்பு தவழ்ந்தோடும் அன்பு முகம், இயக்க லட்சியத்துக்காக எந்நேரமும் ஏதாவது செய்யவேண்டுமென நினைக்கும் சுபாவம் கொண்ட தோழர் வி. டி. பெரியசாமி அவர்கள் 4—8—50 அன்று சென்னையில் சாவுக்குப் பலியானார் என்று கேள்வியுற்றதும் திடுக்கிட்டோம்; திகைத்தோம்.

பல்லாண்டுகளாகச் சென்னையில் சுயமரியாதை இயக்கம், திராவிடரியக்கம் ஆகியவைகளில் பெரும் பங்குகொண்டு, சேவை புரிந்துவந்த பிரமுகர் அவர். வண்ணாரப் பேட்டை என்று நினைத்தாலே, மறைந்த பெரியசாமி அவர்கள் உருவம் தான் முதலில் கண்முன் வந்து நிற்கும்.

செயல் வீரர் ஒருவரின் மறைவால் தேம்பி நிற்கும் சென்னைத் தோழர்களுக்கு, நமது ஆறுதலைத் தெரிவித்துக் கொள்வதோடு — பெரியசாமி அவர்கள் மறைவால் திகைத்துத் துடித்துக் கிடக்கும் அவரது குடும்பத்தாரின் வருத்தத்தில் நாமும் பங்கு கொள்கிறோம். வாழ்க அவர் புகழ்!

★ துன்பக் கேணி ★

[அரங்கண்ணல்]

அவள் மனைவி—எனினும் கணவனைக்கண்ட துண்டமாக்கினாள்! கைபிடித்துத் தன்னுடன் காதல் வாழ்வு நடத்தியவன்தான்—ஆயினும் அவள் வெட்டினாள்! வீழ்த்தினாள்!!

கணவன், கபோதி—காது கேளாதவன்—மூடவன்—தாம்பத்ய வாழ்க்கை நடத்தத் தகுதியில்லாதவன் என்பதல்ல அவளுடைய வெறுப்புக்குக் காரணம். அவள் கணவன் அழகன், ஆனால் அன்புள்ளங் கொண்டவனல்ல. இவளிடம் மட்டுமல்ல, எவரிடமுமே அவனுக்கு இரக்கமும் தயாளமும் பிறப்பதில்லை-காரணம் அவன் முரடன், கொடுமைக்குச் சளைக்காதவன்!

அவன்மீது வெறுப்புப்பிறந்தது அவளுக்கு-வேறு எவன் மீதாவது கள்ளக் காதல் ஏற்பட்ட காரணத்தால் அல்ல. தனது திருட்டு வேலையை கணவன் கண்டுவிட்டானே என்ற கலக்கத்தால் அல்ல அவள் அவனை வெட்டியது!

வேறு யாரையும் அவள் திரும்பிப் பார்த்ததில்லை—சகலமும் அவன்தான் என்று நம்பியே இருந்தாள். அவனோடு வாழ்ந்து குழந்தைகளுக்கும் தாயாரானாள். இருந்தும், வெட்டினாள்—தூங்கும்போது அரிவாளைத் தூக்கித் துண்டாக்கினாள்!

கொடுவாளைத் தூக்கியபோது தன்னுடன் பேசியது இந்த முகந்தானே, அணைத்து மகிழ்வித்தது இந்த உடல் தானே, கொடுமை தாண்டவமாடினாலும் நம்மை மணந்த கணவன்தானே, கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருடனல்லவோ, இவனையா கொல்லுவது, கைபிடித்த கணவனுயிற்றே, உலகம் சிரிக்காதோ-ஊரார் தூற்றுவோ-அழியாத பழியேற்பட்டு விடுமே, என்றெல்லாம் அவள் கலங்கவில்லை, சித்தம் சோரவில்லை! தூக்கினாள், போட்டாள், அவன் செத்தான்.

அவ்வளவு வெறி, அவளிடம் குடி கொண்டிருந்தது. 'ஐயோ! என்ன மோசமான காரியம்-கனவிலும் நினைக்கமுடியாத கொடும் பாதகம். கட்டியவனைக் கொலை செய்வதா? அவள் பெண்ணா பேயா? நளாயினி இருந்த பூமியிலே பிறந்தவள்தானா—மலர்க்குலம் என்று கூறுவார்களே, மங்கைகளை! ஒரு மங்கையா—தன் கணவனை, குழந்தைகள் அருகில் தூங்கிக்கொண்டிருக்கும்போது கொன்றாள்' என்று, கேட்பார்கள், இச்சம்பவத்தைப்படிப்போர்.

"கள்ளப் புருடனுக்காகக் கைபிடித்தவனைப் பல வழிகளில் கொலை செய்தவர்களைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன்—ஆனால், இவள் நடத்தை தவறியவளல்ல என்று கூறுகிறாய். கணவனோடு வாழ விரும்பியவள் என்று சொல்கிறாய். ஆனால் கண்ட துண்டமாக்கினாள் என்று விவரிக்கிறாய்—ஒன்றுமே புரியவில்லையே!" என்றும், நினைக்கத் தூண்டும்.

ஆமாம்! அவள் விபசாரியல்ல; ஓடுகாலியல்ல! கணவனோடு வாழ விரும்பினாள்—ஆனால் அவன் அவளை வாழவிடவில்லை! தொல்லைக்கு மத்தியில் வைத்தான், இம்சித்தான் எப்போது பார்த்தாலும் அடி, உதை, ஆகியவைகளைத் தந்தான்.

"ஓகோ! அவனுக்கு வேறொருத்தி மீது ஆசை போலும்—அதற்கு இடையூறாக இவள் இருந்திருப்பாள். பெண் மோகத்தால் பெரிய சாம்ராஜ்யங்கள் கூடச் சரிந்திருக்கும்போது அவன் எம்மாத்திரம்? தன் கள்ளக் காதலியோடு, குலாவி மகிழ, தன் மனைவியைக் கொடுமைப் படுத்தியிருப்பான்" என்று கூறத்தோன்றும். இது சகஜமுங்கூட!

ஆனால், அவன் அவளைக் கொடுமைப் படுத்தியதற்குக் காரணம் அதுவல்ல. வேறொருத்தியின் மீது கொண்ட மோகமல்ல—காரணம்! அவன் மோக நடத்தைக்காரனுமல்ல — முரடன் தான், ஆனால் துர்நடத்தைக்காரனல்ல!

எனினும் அவளைக் கொடுமைக்குள்ளாக்கினான்—புழுப்போல் தன் மனைவியைச் சித்திரவதைக்காளாக்கினான், உணவும் உடையும் கொடுக்காமல்! பதிலுக்கு அடியும் குத்தும் தந்தான்!

"சரிதான்! பின் ஏன் அவள் கொலைமாட்டாள். ஆசைக் கணவன், தனக்குச் சோறும், துணியும் தராமல் துயரத்தையே தந்தால் தாங்கிக் கிடக்க அவளென்ன கல்லோ—மனுஷிதானே! அதுதான் கொலை செய்திருக்கிறாள். கொடுமை தாங்க முடியவில்லைப் போலும்!" என்றுதான், நினைப்போம், நாம். ஆனால், அவள் கணவன், கருமியல்ல!: மனைவிக்காக உணவுக்கும் சேலைக்கும் செலவழிக்கும் பணத்தைச் சேர்த்து வைப்போம்—என்று எண்ணியவனல்ல! அவனுக்கும் ஆசைதான், தனது ஆசை மனைவிக்கு நல்ல ஆடைகளை அணிவிக்க—வாங்கித்தர. ஆயினும் அவன் வாங்கித்தரவில்லை!—காரணம் அவனால் இயலவில்லை!!

வறுமை அவனை வாட்டிற்று—ஏழ்மை அவனைச்சித்திரவதை செய்தது—ஏழ்மையும் பசியும் தன்னை இம்சிக்க அதைத்தாங்கிக்கொள்ள அவனால் முடியவில்லை!

வயிறு பசிக்கும்போது, வாயிலில் அழுத கண்ணீருடன் மனைவி நின்றால்! ஊர்சுற்றி, ஒரு வேளை சோற்றுக்கும் வழியின்றித் திரும்புவனை வீட்டிலும் விசாரம் வரவேற்றால்? வெந்துமடியாதா, அவன் இதயம்? வேகங்கொள்ளாதா, அவன் உள்ளம்? அதிலும் அவன் முரடன் — கல்லாதவன், ஏழை! கேட்கவேண்டுமா, வெளியிலே பெரியமனுஷர்களிடம்கேட்ட வசவுகளைத் தன்மனைவியிடம் காட்டினான். வேலைக்குத் திரிந்தபோது, ஒவ்வொருவர் வீசிய சொல்லம்புகளையும் மனைவியிடம் வீசினான்!வேறுயார் இருக்கிறார்கள், அவனுக்கு, அவன் கோபத்தைத் தணித்துக் கொள்ள!

ஒருநாளா,-இரண்டு நாளா,-பல ஆண்டுகள் இதேவழியில் ஓடின. அவள்தான் என்ன செய்வாள்—வயிற்றிலோ பசி, எதிரிலோ முரட்டுக்கணவன்! எத்தனைநாள் சகிப்பாள்? பசியோடு கொடுங்கோன்மையும் தன்னைத்தாக்கினால்! "வெறி" ஏற்பட்டது அவளுக்கு, வேண்டுமென்றே தன்னைத் தன்கணவன் துன்புறுத்துவதாகக் கருதினாள், தூங்கும்போது வெட்டினாள்!

"கணவனைக் கொலை செய்தாள் ஒரு காரிகை! காரணம் ஏழ்மை!! வேடிக்கையானதப்பா, வறுமை தாங்காது தன்குழந்தைகளை முதலில் தள்ளிவிட்டுத்தானும்கிணற்றில்குதித்துமாண்டபெண்களின் பட்டியல், நிராகரிப்பும் ஏழ்மையும் தாங்காது தாங்களாகவே தூக்குப்போட்டுக்கொண்டு தொங்கும் மாதர்களின் பெயர்கள் தினசரி வந்துகொண்டிருக்கின்றனவே! அதுபோல நடக்காமல் — இது வேறுமாதிரியாயிருக்கிறதே. கணவன் கொடுமை தாங்கவில்லையென்றால் அதற்கு அவன் கண்மூடிய நேரம் பார்த்துச் சித்திரவதையா செய்வது? சேச்சே! எந்தப் பெண்ணுக்கும் இவ்வளவு மனத்துணிவு ஏற்படாதே! நங்கைகள் — நல்லமலர்கள்! மலர்கள் தாங்களாகவே கசங்கினாலும் கசங்குமேயொழிய, இன்னொன்றைப் பாய்ந்து கிழிக்கும் வகையானவை அல்லவே! பெண்களும் அதே போலத்தான். மாதர்கள்புலிகளல்ல;பசுக்கள்! புலியாகிவிட்டால் அவர்கள் பெண்களல்ல; பேய்கள்!" என்று, விளக்கமும், விரிவுரையும் கூறத்தோன்றும், பலநண்பர்களுக்கு.

அவர்களுக்குப் பதில் தரவேண்டிய சிரமத்தை நமக்கு வைக்கவில்லை, சென்னை உயர்நீதி மன்றத்து நீதிபதிகளான கோவிந்தமேனன், பஷீர் அஹமத்சையத் ஆகியோர்.

கொலை செய்தாள் என்ற குற்றத்தை ஒப்புக்கொண்டு தீவாந்திர சிட்சையை அவளுக்குத்தண்டனையாகத் தந்தனர் அண்மையில். ஆனால், அவளது நிலைக்கு அனுதாபப்பட்டுத் தீவாந்திர சிட்சையை ஓராண்டு கடுங்காவலாகக் குறைக்கலாம் என்று சர்க்காருக்குச் சிபார்சு செய்திருக்கின்றனர். 'அவள் கொலைகாரி—சந்தேகமில்லை! ஆனால் அவள் அத்தகைய கொடூரச் செயலில் ஈடுபட்டதற்குக் காரணம் அவள்மட்டுமல்ல. அவளைச் சேர்ந்த வகுப்பினர் வாழும் சமுகத்தின் நிலையும், அவர்களது ஏழ்மையும் அவளது செயலுக்குக் காரணமாகும். எனவே அவள்மீது இரக்கங்கொண்டு — தீவாந்திர சிட்சையை ஓராண்டு கடுங்காவல் தண்டனையாகக்

(அடுத்த பக்கத்தில்)

அடக்குமுறை தர்பார்-மற்றொரு காட்சி!

"கோட்சே கூட்டம்" நூல் மீது பாய்ச்சல்

பிச்சமூர்த்தி மீது வழக்கு

'கோட்சே கூட்டம்' மீதும், சர்க்காரின் கரம் சென்று தாக்கிவிட்டது-'கோட்சே கூட்டம்' என்ற இச் சிறு நூலை எழுதியவர் குளித்தலை கி. பிச்சமூர்த்தி! பொதுவாழ்வுப் புயலில் சிக்கியவர்—இன்னும் பல ஏடுகளைத் தாயகத்திற்குத் தந்தவர்.

'கோட்சே கூட்டம்' எழுதியது குற்றமாம்—சொல்கிறது, எழுத்துரிமை பேசி ஊராளும் உரிமை பெற்ற பாராளும்காங்கிரசாட்சி! இந்நூல் வெளிவந்து ஈராண்டுகள் ஓடி மறைந்துவிட்டன. இந்நூல் வகுப்புத் துவேஷத்தை வளர்க்கிறதாம்—அதற்காக வழக்காம் — எப்பொழுது? நூல் அச்சான பிறகு, விற்பனை செய்த பிறகு, இல்லந்தோறும் அந்த ஏடு சென்றடைந்த பிறகு, எல்லோரும் தங்கள் உள்ளத்தில் அக் கருத்துக்களை ஏற்றியான பிறகு, அடுத்த பிரதி அச்சிட யோசனை பிறந்த பிறகு, இத்தனையும் முடிந்து இரண்டு ஆண்டுகள் தாண்டி, 153-A என்ற குற்றச் சட்டத்தை தேடியெடுத்து வீசிவிட்டனர் ஆளவந்தார்—அக்கினி யாஸ்திரம் என்று அவர்கள் நினைப்பது அந்தப் பிரிவு சட்டத்தைத்தான்—ஆனால் மக்கள் மன்றத்து எழுத்துரிமை என்ற வருணாஸ்திரம் உண்டென்பதை, அவர்களே, நமக்குணர்த்தியவர்கள் — அதற்குள்ளாகவா, மறந்துவிட்டார்கள்!

அச்சிட்ட குற்றத்திற்காக ரூ 1000 கொட்டி 'அழுது'விட்டார்கள், பதிப்பக நிர்வாகிகள். வழக்கு குழித்தலை, கரூர், மணப்பாரை இப்படி பல இடங்களில் தொடர்ந்து நடைபெறுகிறது. பதிப்பக நண்பர்கள், தூத்துக்குடியைச் சேர்ந்தவர்கள். வந்து வந்து, எண்ணம் வெந்து, மனம் நொந்து போகிறார்கள்!

பேச்சுரிமையைக் கல்லறைக்கு அனுப்புகின்றார்கள், காங்கிரசார். அடக்குமுறைப் பாணங்கள் பாய்ந்து சென்றவண்ணமே உள்ளன. எதேச்சாதிகார வெறி, உச்சிக்குப் போய், ஊர்த்துவத் தாண்டவமாடுகிறது. அணையும் தீபத்தின் கடைசி சுடர் நிலையோ, இந்த ஆளவந்தாருக்கு என்று ஐயம் வந்து நிற்கிறது நம் கண்களின் முன்னால்!

"அவர்களின்" அடுத்த அம்பு!

கல்வித்துறையில் வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறை செல்லுபடியாகாது என்ற தீர்ப்பைப் பெற்றுவிட்டனர் — வகுப்புவாதிகள். அவர்களின் அடுத்த இலக்கான உத்யோகத் துறை குறித்தும், அவர்கள் மும்முரம் அதிகமாகியிருக்கிறது—ஜில்லா முன்சிபு வேலைக்குத் தன்னைத் தேர்ந்தெடுக்கவில்லை யென்ற காரணங் காட்டி, பீமாவரத்தைச் சேர்ந்த பி. காமராஜு என்ற அட்வகேட், ஆளவந்தார்மீது சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளார். இவர் ஒரு பார்ப்பனர். வகுப்புவாரி பிரதிநிதித்துவம் காரணமாகவே தனக்கு மேற்படி பதவி கிடைக்கும் சந்தர்ப்பம் இல்லாமற் போய்விட்டது என்பதே அவரது வழக்கில் அவர் காட்டியிருக்கும் காரணமாகும்.

மேற்படி வழக்கு இன்னும் இரு வாரங்களில் உயர்நீதி மன்றத்தில் விசாரணைக்கு வரும்.

ஆங்காங்கே

மதுரை சொற் பயிற்சி மன்றம்

30—7—50-ல் சுப்பிரமணியபுரம் சேது இல்லத்தில் அமைப்புக் கூட்டம் நடந்தது. தோழர் பிச்சை பேசினார். இனி ஒவ்வொரு வாரம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு சொற்பயிற்சி நடைபெறும் என்று செயலாளர் சேது அறிவிக்கிறார்.

பொன்னி நினைவுப் படிப்பகம்

கடலூர் என். டி.

24—7—50-ல் தோழர் சி. கி. பாண்டுரங்கன் தலைமையில் நடந்த செயற்குழுத் தேர்தல் கூட்டத்தில், வில்லாளன் செயலாளராகவும், இராமு துணைச் செயலாளராகவும் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

(முன் பக்கத் தொடர்ச்சி)

குறைக்குமாறு சிபார்சு செய்திருக்கிறோம்" என்று தீர்ப்பின் முடிவில் குறிப்பிட்டிருக்கின்றனர்.

வகுப்பினர் வாழும் சமுதாயத்தின்நிலை—
அங்கு தாண்டவமாடும் ஏழ்மை.

ஒரு பெண்ணைக் கொலைகாரியாக்கியிருக்கிறது. கணவனைக் கொல்லுமளவுக்கு கல்நெஞ்சமுடையவளாக ஆக்கியிருக்கிறது — இது நீதிபதிகள் தீர்ப்பு.

* * *

வெறி அவன் கண்களில் தாண்டவமாடுகிறது -- பசிக்கொடுமை அவனைப் பாயும் புலியாக மாற்றுகிறது! சிறுகுழந்தை — கழுத்தில் தங்கச் சங்கிலியுடன் நிற்பது அவன் கண்ணில் படுகிறது. அவனும் மனிதன்தான். சிறுகை நீட்டி, மழலை பேசி நிற்கும் அக்குழந்தையின் அழகில் லயிக்கும் மனநிலை இல்லாமலில்லை. ஆனால் பசிக்கொடுமை அவனது இதயத்தை மரத்துப்போகச் செய்கிறது. வறுமை, அக்குழந்தை போட்டிருக்கும் தங்கச்சங்கிலிமீது அவன் கண்களைத் திருப்புகிறது. மனம்—கல்லாகிறது! குழந்தையை ஏமாற்றி அழைத்துச் செல்கிறான் — மறைவிடம் சென்றதும் குழந்தையின் கழுத்தை நெரிக்கிறான். கையில் சங்கிலி! கீழே வாழ்வின் சிறு மலர், பிணமாக!!

பரிதாபம் நிரம்பிய சோகச் சம்பவம். திருடியவன் மனிதன் — ஆசைபாசம் எல்லாவற்றையும் துறந்த ரிஷியல்ல! தன் குழந்தைக்குக் காலில் சிறு புண் என்றாலும் அவன் கலங்கிப் போயிருக்கிறான் — காய்ச்சல் கண்டது என்றால் கண்ணீர் வடித்திருக்கிறான்! ஆனால், இப்போது? பசியின்முன், அதெல்லாம் பறந்து விடுகிறது. வறுமையின் விளைவால் இன்னொரு சின்னஞ் சிறு கிளியை, சிங்காரச் சிறுவனை பிணமாக்குகிறான்! சாதாரண சங்கிலிக்காக ஒரு சிறு பிம்பம் பிணமாகிறது!!

சமுதாயத்தில், ஆங்காங்கே, நடைபெறுவதாக வெளிவரும் சோகச் செய்திகள்—இது போலப் பலப்பல உண்டு.

காரணம், வறுமை, ஏழ்மை - அதோடு அவன் வாழுமிடத்தின் நிலை, அவனைச் சார்ந்தோரின் குணப் பண்பு ஆகியவைகள்தான்.

இந்தச் சூழ்நிலையைத்தான் "வகுப்பினர் வாழும் சமூகத்தின் நிலை" என்று தீர்ப்புத்தந்திருக்கின்றனர், நீதிபதிகள்.

சமூகத்தின் நிலை—எங்கெங்கு வறுமையும் ஏழ்மையும் அறியாமையும் தாண்டவமாடுகிறதோ அங்கெல்லாம் திருடர்கள், கொலைகாரர்கள் உலவுகிறார்கள்.

கொலையும் திருட்டும், பிறக்கும் போதே எவனுக்கும் உருவாவதல்ல. வளரும்போது, வாழ்வின் கொடுமையால் வறுமையும் அறியாமையுமே அவனை அத்தகைய முரடனாக ஆக்குகின்றன!

தன்னையும் தன் குடும்பத்தையும் காப்பாற்ற வக்கு, வழியில்லாது அலைகிறான். வீட்டிலே மனைவியின் கண்ணீர்! வெளியிலே, பிறர் அவன்மீது வீசும் சுடுசொற்கள்! கொஞ்சங் கொஞ்சமாக அவன் மனநிலை மாறுகிறது—மனித நிலை மாறுகிறது—மிருகமாகிவிடுகிறான்! உலகமே, அவனை வஞ்சிப்பதாக நினைக்கிறான். தன் கோபத்தை, கண்டோரிடமெல்லாம் காட்டத் தலைப்படுகிறான். அவன் வாழ்வு தலைகீழாய் மாறிவிடுகிறது. எப்போதும் குரூரம்—கோபம்—கொந்தளிப்பு உடையவனாக ஆகிவிடுகிறான்! பிறகு அவன், சமுதாயத்தில் திருடன், கொலைகாரன், பழிக்கஞ்சாப் பாதகன்!

அவன் வாழப்பிறந்தவன்தான் — ஆனால் வாழ முயன்றும் வழியில்லாததால், அவன் வாழ்வு கோரப் பாதையை நோக்கித் திரும்பிவிடுகிறது! திரும்புவதற்குக் காரணம் வறுமை—ஏழ்மை—அறியாமை!

தீயப் பெண் தன்கணவனைக் கொன்றாள்—கஷ்டத்தைச் சகிக்கமுடியாமல். அவள்கணவனோ, அவளோடு ஒருபோது இன்பமாக வாழ்க்கை நடத்தியவன்தான். ஆனால் அந்த இன்பம், வறுமையால் நிலைக்கவில்லை! வாட்டம் பிறந்ததும் அன்புபோய் அடி, உதை, உண்டாயிற்று மனைவியிடம்! மனைவியும் தாங்கினாள், அழுதாள், ஆனால், முடிவில் கொடுமைதாங்காது மிருகமாகமாறினாள்! கணவனையே கொன்றாள்!!

மலையாளத்தைச் சேர்ந்த தோட்டப்பள்ளி என்ற கிராமத்தைச் சேர்ந்த தீயா ஜாதியைச் சேர்ந்த, ஒரு பெண் தன் கணவனைத் தூங்கும் போது, வெட்டிக் கொன்றாள் என்பதுதான் வழக்கு. அதை விசாரித்துத் தீர்ப்புக்கூறும்போதுதான், அவள் இக்கொலையில் ஈடுபட்டதற்குக் காரணம் சமூகத்தின் நிலையும், அவர்களது ஏழ்மையும்தான் என்று காட்டியுள்ளனர் ஐகோர்ட் நீதிபதிகள். உண்மை—தீயஜாதியினர் இங்கு குறிப்பிடும் சக்கிலி, பறையர் என்பவர்களைப்போன்ற தாழ்த்தப்பட்ட வகுப்பினராகும். ஏழ்மையும் அறியாமையும் குடிகொண்டவர்கள்தான் அவர்கள். ஆகவேதான், அங்குஇது நடந்திருக்கிறது!

ஏழ்மை!

அறியாமை!

மூடநம்பிக்கை!

இம்மூன்றும், சமுதாயத்தில் உழைத்துப் பிழைப்போர் வாழ்வில் நிறைந்துகிடக்கின்றன. கையையும் காலையும் நம்பிவாழும் கூட்டம் அது! கற்பிளந்து, மலைபிளந்து, கனிகள்வெட்டிச்சாகும் கூட்டம் அது! பச்சை இரத்தம் பறிமாறி இந்த நாட்டைச் சலியாத வருவாய் உடையதாக ஆக்கும் கூட்டம் அது! எப்போதும், உழைத்து உருமாறித்தேயும் கூட்டம் அது! அங்கு,

கல்வி,

நாகரீகம்,

விஞ்ஞானம்.

பரவவில்லை! அதனால் அவர்கள் வாழ்வும் மீளவில்லை! ஆட்டையும் மாட்டையும் ஓட்டி வயிறு வளர்ப்பவர்கள், மரமேறி வயிறு வளர்ப்பவர்கள், செருப்புத் தைக்கும் சக்கிலி, சீமானுக்கு வீடுகட்டும் கொத்தர், சிங்காரச் சாமான் செய்துதரும் ஆசாரி, பொன்னை ஆபரணமாக்கும் தட்டார்............இதுபோல உழைப்பையே பெரிதென நம்பிக்கிடக்கும் பெரும்பான்மை சமுதாயத்தினரிடை கல்வி இல்லை; நாகரிகம் இல்லை; விஞ்ஞானம் வரவில்லை!

கம்யூனல் ஜி. ஓ.

1. இந்தத் திட்டத்தைப் பொது மக்கள் புரிந்துகொள்ளும்படி விளக்கினீர்களா?

2 இந்தத் திட்டம், சமூக நீதிக்காக ஏற்பட்டது என்பதை எடுத்துக் கூறினீர்களா?

3. கல்வி நிலையங்கள், உத்யோக மண்டலம் ஆகியவற்றிலே ஒரு சாரார் ஆதிக்கம் இருப்பதைக் காட்டும் புள்ளி விவரம் பொது மக்களுக்குத் தெரியுமா? தெரியச் செய்தீர்களா?

4. பொதுக்கூட்டங்கள் மூலமாகவும், துண்டு வெளியீடுகள் மூலமாகவும், பொதுமக்களுக்கு கம்யூனல் ஜி. ஓ. வின் மேன்மையையும், அது ரத்து ஆவதால் ஏற்படக்கூடிய கோரபத்தையும், விளக்கிக் கூறுங்கள்.

நாட்டின் மாணிக்கங்கள் அவர்கள்! ஆனால் திருடர்களும், கொலைகாரர்களும்தான் உற்பத்தியாகின்றனர், அங்கிருந்து! வறுமை, ஏழ்மை, அறியாமை அவர்களை அத்தகைய நிலைக்குக்கொண்டு செல்கிறது!

கல்வி கற்றிருந்தால், அவனுக்கும் வாழச் சந்தர்ப்பம் கிடைத்திருக்கும், தன் குடும்பத்தையும் காப்பாற்றியிருப்பான், மனைவியோடும் மகிழ்ந்திருப்பான்—அவளும் அவனோடு குலவி மகிழ்ந்து வாழ்ந்திருப்பாள், கொடுவாளைத் தூக்கியிருக்கமாட்டாள்!

ஆனால், ஐயகோ! சமுதாயத்தில் அவர்கள் பலர்—ஆனால் வாழமுடியவில்லை!! கொடுமைக்கு ஆளாகி, கொந்தளிப்பால் சாகின்றனர்—குத்திக் கொண்டு!

நாட்டில் பெரும்பான்மையோர் அவர்கள்—ஆனால் வாழ வழியில்லை அவர்களுக்கு. சமுதாயத்தை வாழ்விக்கும் கல்வியறிவு கிடைப்பதில்லை. கல்வி—எட்ட முடியாத கோபுரமாக இருக்கிறது. கல்வி, மனப்பண்பை நல்லதாக்குவது—சுபவனையும் திருப்பும் சக்தி வாய்ந்தது, அறியாமைக் குழியினின்றும் மீட்டு 'உலகத்தைப் பாரப்பா! அதோடு நீயும் ஓடப்பா!' என்று உணர்த்துவது. இருட்டை ஒளிமயமாக்குவது! அது, கிடைப்பதில்லை அவர்களுக்கு! பசியையும் அறியாமையையும் அணைத்துக்கொண்டு வெட்டிவீழ்த்தி, வெஞ்சினத்துக்கு இரையாகி, மாண்டுமடிகின்றனர்.

ஏழ்மையும் அறியாமையும்—உழைப்புலகின் மீளா விலங்குகள். அதை உடைத்தெறியும் சம்மட்டி கல்வி! ஆனால், அது அவர்களுக்குக் கிடைப்பதில்லை.

ஆனால் அதே நேரத்தில், மாளிகைவாசியினரும், மார்பு நூல் மரபினரும் வாழும் நிலையை நோக்குங்கள்! பட்டு அங்கே பளபளக்கிறது 'வைரம்' டால் அடிக்கிறது, — கோபத்தோடு பேசியறியாத கணவனோடு, கொஞ்சிக் கிடக்கிறாள் கோமளம்! வீணை எங்கேயென்று கேட்டுக்கொண்டு பாட்டுவாத்தியாரிடம் போகிறாள் பத்மா, வைரத் தோடு மட்டும் போதாது 'நெக்லேஸ்' வேண்டும் என்று கேட்கிறாள் விஜயா! 'பயல் பி. ஏ. பாஸ்செய்துவிட்டான் பாடி' என்று பேசுகிறார் கணவன் மனைவியிடம்! கேளிக்கை, கேலி, ஊடல் — வாழ்க்கை மலர்ச்சோலையாக இருக்கிறது, சமுதாயத்தில் சிறுபான்மையினர் அவர்கள். இங்குவாழும் $4\frac{1}{2}$-கோடி மக்களிலே, 13 இலட்சம்தான் 'அவர்கள்' ஆனால், அவர்கள் வாழ்விலே தென்றல்—இன்பம்—சுகம்—எல்லாம்! 'அவர்கள்' கல்லுடைக்க அறியார்கள், கலப்பையைத் தொட்டதுகூடக் கிடையாது, கடுமையான வேலையைச் செய்தறிந்ததே கிடையாது! எனினும் வாழ்வு அங்கு மலர்ச்சோலை!

ஆனால் அதேநேரத்தில் 4 கோடி பேராக உள்ள திராவிட சமுதாயத்திலே-திருடன் உலவுகிறான், கொலைகாரன் எழும்புகிறான், கொடூர எண்ணம் கொண்டோன் உற்பத்தியாகிறான். கணவனை மனைவி கொல்லும் பரிதாபக் காட்சி நடைபெறுகிறது!

உழைக்கும் சமுதாயத்தில் இத்தகைய கொடூர மனிதர்கள் உற்பத்தியாவதற்குச் சமூகத்தின் சூழ்நிலையும் வறுமையும்தான் காரணம் என்று உயர்நீதி மன்றத்து நீதிபதிகள், தந்திருக்கின்றனர், தமது தீர்ப்பில்.

உழைக்காது வாழ்வோர் சிலர் — எனினும் அவர்கள் உயர்ந்தோராக இருக்கிறார்கள், உலவுகிறார்கள், வாளாளும் சக்தியை ஆட்டிப்படைக்கிறார்கள்! வைரத்தையும் பொன்னையும், பட்டையும் பீதாம்பரத்தையும், சங்கீதத்தையும், பெற்று, ரசித்து வாழ்கிறார்கள்!

ஆனால், உழைப்பையே நம்பி வாழும் கூட்டமோ மிகப்பெரிது — ஆனால் அது உருத் தேய்கிறது, நாளுக்குநாள் உதவாக்கரையாகிக் கொண்டே போகிறது! சாதாரண எஸ். எஸ். எல். சி. படித்தவர்கள்கூட அதிகம் இல்லை! பலர் — கல்வி என்றால் அதன் வாசனையைக்கூட அறியமாட்டார்கள்! வாழ்க்கை - தமது கலப்பையிலும் கரத்திலும், என்று எண்ணுபவர்கள்! காலை முதல் மாலைவரை உழைப்பதும், உழைப்புப் பயன்தரும் போது மகிழ்வதும், பயன் தராமற்போனால் அழுவதும்தான் அவர்கள் வாழ்க்கை!

வாழ்க்கை வாழ்வதற்கே—ஒரு இடத்தில்!
வாழ்க்கை நோவதற்கே — இன்னொரு இடத்தில்!

வாழ்க்கை ஓரிடத்தில் வளமாக இருப்பதற்கும், இன்னோரிடத்தில் பாலையாகிக்கொண்டே போவதற்கும் உள்ள காரணம்—கல்வி.

கல்வி நீரோடையின் பக்கத்திலும் செல்ல பெரும்பான்மை சமுதாயத்தினருக்கு வாய்ப்பும் வசதியும் இல்லை. ஏழ்மை என்ற வேலி அவர்களை அங்கு செல்லாமல் தடுத்துக் கொண்டே இருக்கிறது!

நீதிபதிகள்—மனைவி, கொலை செய்யுமளவுக்குச் சென்றதற்குக் காரணம் சமுதாயத்தின் சூழ்நிலையும், ஏழ்மையும்தான் காரணமென்று காட்டியிருக்கின்றனர்.

சூழ்நிலை—அங்கு, கல்வி மணம் இல்லாத காரணத்தால் இருட்டுக் குழியாக இருக்கிறது. அறியாமையும், கொடூர எண்ணங்களும் வளர்வதற்கான அடிப் பீடங்களோடு விளங்குகிறது.

சூழ்நிலை—இன்னோரிடத்தில், வளரும் நிலவாக இருக்கிறது. கல்வி மணமும் வாழ்க்கையில் ரசிக்கும் தன்மையும் அதிகமாக வளரும் காரணத்தால் இன்பப் பாட்டிசைக்கின்றனர். எப்போதும், எக்களிப்போடு இருக்கின்றனர்.

இந்தச் சூழ்நிலை சமமாவது எப்படி? எப்போது? கொலையும் களவும் மாறி அறிவும் நாகரீகமும் என்றுதான், உழைப்போருலகை எட்டுவது? இத்தகைய சூழ்நிலை உதயமாகக் காரணமாயிருப்பது — கல்வி. ஆனால், அக்கல்வியையும் தங்களது ஏகபோக உரிமையாக்கிக் கொள்ள திட்டமிட்டு வெற்றிபெற்று விட்டனர், "அவர்கள்." கல்விச் சமநீதி வழங்கிய, வகுப்புவாரி பிரதிநிதித்வ முறையும் குழி தோண்டிப் புதைக்கப்பட்டுவிட்டது. இந்நிலையில் வாழ்விழந்து வழி கெட்டுக் கிடக்கும்—சமுதாயம் வாழ்வது தான் எவ்விதம் — வேதனையோடு கேட்கிறோம், தீயப் பெண்ணின் மனம் கூசும் சம்பவத்தால் நீதிபதிகள் தந்துள்ள தீர்ப்பைக் காட்டி!

*

திராவிடநாடு

ஞாயிறு] 13—8—50 [காஞ்சி

கடமையைச் செய்யக் கலங்காதீர்—ஆளவந்தாருக்கு அறைகூவல்!

நமது கருத்து

சுப்ரீம் கோர்ட்டுக்குச் செல்வதென முடிவு செய்துவிட்டோம்.

சமநீதி முறையைக் காப்பதற்கான எல்லா நடவடிக்கைகளையும் எடுப்போம்.

அவசியமானால் இந்திய அரசியலமைப்பைத் திருத்தவும் முயற்சிப்போம்.

சென்னை சட்டசபையில் கடந்த 9-ந் தேதியன்று, இத்தகைய உறுதிமொழியைச் சர்க்கார் சார்பில் கல்வியமைச்சர் மாதவமேனன் தந்திருக்கிறார். மாதவனார், சட்டசபையிலே தந்திருக்கும் செய்திகள் நமது இதயத்தில் மகிழ்ச்சியையும் மலர்ச்சியையும் தருகிறது.

உயர்நீதி மன்றத்துத் தீர்ப்பு கிடைத்தது முதல், நாம், மாதவனார் இன்று வெளியிட்டிருக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறோம்.

தீர்ப்புக் கண்ட நாள் முதல் ஆளவந்தார் இது குறித்துக் கடைப்பிடித்த "அமைதி" நமது இதயத்தில் அச்சத்தை கிளப்பிற்று. மந்திரிமார்கள், சாக்குச் சொல்லிச் சந்தர்ப்பத்தை நழுவ விட்டு விடுவார்களோ என்ற சந்தேகமும் சஞ்சலமும் நம்முள் குடிகொண்டது.

வகுப்புவாரி முறை நீடிக்க வேண்டும் என்பது, எந்த ஒரு கட்சியுடைய தனிப்பட்ட பிரச்னை அல்ல. நாட்டின் பொதுவான பிரச்னை—நாட்டில் வாழும் நான்கு கோடி மக்களையும் பாதிக்கும் பிரச்னை. எனவேதான், இதை இழந்துவிட்டால், நமது எதிர்கால வாழ்வு இருட்குகையாகி விடுமே என்று துடித்தோம்—வந்தது விபத்து; வழி காட்டுங்கள் என்று அழைத்தோம், 'எல்லோரும் வாரீர் நண்பர்களே!' என்று வேண்டினோம்.

"இவர்கள் சொல்வதா?—அதை நாம் ஏற்பதா?" என்ற வீம்புக்கு, அடிக்கடி இரையாகும் காங்கிரஸ் நண்பர்களும், அமைச்சர்களும், இந்தப் பிரச்னையில், நம்மை போலவே போதிய கவனம் செலுத்துகின்றனர் என்பது அறிய மகிழ்ச்சி ஏற்படுகிறது நமக்கு.

'ஜஸ்டிஸ் கட்சிக்காரர்களால் வகுக்கப்பட்டது தானே—திராவிடரியக்கத்தால் வலியுறுத்தப் படுவதாயிற்றே. இதற்காக, நாம் ஏன் டில்லியோடு மோதிக்கொள்ள வேண்டும்' என்று வழுக்கி விழுந்து விடாது, உண்மையான உள்ளத்தோடு, நடவடிக்கைகளை மேற்கொள்ளத் துணிந்த காங்கிரஸ் மந்திரிமார்களை மனமார வாழ்த்துகிறோம் நாம். அதற்குக் காரணமாயிருந்த காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்களையும், தலைவர்களையும் பாராட்டுகிறோம்.

நமது கோரிக்கைகள் — நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கை நட்சத்திரம் உதயமாகியிருக்கிறது. ஆனால், அந்த உதய வேளையைக் கண்டு நாம் உட்கார்ந்து விடுதல் கூடாது; ஆகாது.

வகுப்பு நீதிப் பிரச்னையில் பொதிந்து கிடக்கும் முக்கியத்துவம் மக்களிடையில் பரவவில்லை.

மக்கள் மன்றத்தில் வகுப்புநீதி குறித்த விபரங்கள் தெரிவிக்கப்பட வேண்டும். அதற்கான முயற்சிகளைச் செய்யவேண்டியவர்களாக நாம் இருக்கிறோம்.

சுப்ரீம் கோர்ட்டில் தீர்ப்புக் கிடைக்கவில்லை என்றால் இந்திய அரசியல் திட்டத்தைத் திருத்துவோம் என்று ஆளவந்தார் உறுதி தந்துள்ளனர். இதன்படி நடப்பார்கள் என்று நாம் நம்புகிறோம்.

எனவே, அத்தகைய நேரம் விளைந்தால் அதுபோது மக்களின் எதிரொலியை எடுத்துக் காட்டவேண்டிய பொறுப்பு இருக்கிறது நமக்கு.

ஆகவே திட்டமான முறையில் வகுப்புவாரி நீதி குறித்து மக்கள் மன்றத்தில் புதயெழுச்சி எழும்பும்படி செய்வதும்—எழுச்சியைத் திரட்டுவதும் நமது வேலையாகும். வீம்பைக் கைவிட்டு, சமநீதி உரிமைக்காகப் போராட வந்திருக்கும் ஆளவந்தாரைப் பாராட்டுகிறோம். 'பாதை தவறிடாமல்' வெற்றி பெறும் நோக்கத்தைக் கைவிடாது முயற்சிக்கவேண்டும் என்று விரும்புகிறோம். நீதிக்கும் நாட்டு நன்மைக்கும் என்றும் நமது ஆதரவு உண்டு! தவறிய பாதையில் நடந்தால் தடுத்து நிறுத்தவும் சக்தியுண்டு!! *

தகுதி, திறமை சதிகாரத் திட்டம்

மானம் பெரிது—பதவி சிறிது

ஆதரவு திரட்டித் தருவோம்!

அண்ணாதுரை உறுதிமொழி

"சென்னை மந்திரிமார்கள் வகுப்புநீதிப் பிரச்னையில் நாணயமாக நடந்துகொள்ளவேண்டும். "மானம் பெரிது—பதவி சிறிது" என்பதை மனதில் கொள்ளவேண்டும். சுப்ரீம் கோர்ட்டுக்குச் சென்று, அங்கும் வகுப்பு நீதிக்கு ஆதரவான தீர்ப்பு கிடைக்கவில்லை என்றால் அயர்ந்துவிடக் கூடாது. காங்கிரஸ் மேலிடத்தை வற்புறுத்தியோ அல்லது சட்ட சபையில் தீர்மானித்தோ, எப்படியாவது வகுப்புநீதி பெற முயலவேண்டும். முயன்றும் தோல்வியே முடிவு என்றால் மானத்தைப் பெரிதென எண்ணி பதவிகளிலிருந்து ராஜினாமா செய்யவேண்டும். உரிமைக்காகப் போராடும் ஆளவந்தாருக்கு நாம் நமது ஆதரவை, அத்தகைய நேரத்தில், தரத் தயங்கமாட்டோம்!" என்று கடந்த 6-8-50 அன்று திருச்சி நகரசபை மண்டபத்துக்குமுன் நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில் சி. என். அண்ணாதுரை வெளியிட்டார்.

திருச்சி காணாத காட்சி என்று கூறத்தக்க அளவில் கூடியிருந்த அத்தகைய மாபெரும் பொதுக்கூட்டத்துக்கு பெத்தாம்பாளையம் தோழர் பழனிச்சாமி தலைமை தாங்கினர். முதன்முதலாக சேலம் தோழர் சித்தையன் பேசுகையில், "வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறையே நமது வாழ்க்கையின் வழிகாட்டி — அதை இழக்க ஒருபோதும் சம்மதியோம்—சகியோம்!" என்று முழக்கமிட்டார். அடுத்து தோழர் ஈ. வி. கே. சம்பத் சொற்பொழிவாற்றுகையில்:

"வாழ்க்கைத் துறைகளில் உயர்நிலை அடைந்திருக்கும் பார்ப்பனர்கள் மீது, நாம் பொறாமை, மாச்சரியம் அடைகிறோம் என்பதல்ல நம் கிளர்ச்சிக்குக்காரணம். ஒருவனது உடலில் கை அல்லது கால்மட்டும் பெருத்திருந்தால் யாராவது பாராட்டுவார்களா? அதுபோல, சமுதாயத்தில் 100-க்கு 97 பேராக உள்ள திராவிட மக்கள் எல்லாத் துறைகளிலும் தேய்ந்து பிற்போக்கில் இருந்து வருகிறோம். 100-க்கு 3 பேராக உள்ளவர்கள் சிறந்து இருக்கிறார்கள். அதனாலேயே இந்த சமுதாயத்தைப் பார்த்தவர்கள், இது ஒரு நோயாளி சமூகம் என்கிறார்கள்!" என்று ஆத்திரத்தோடு குறிப்பிட்டதோடு, "இதைத் தாங்கித் தாழ்ந்த போகத்தான் வேண்டுமா? நமது உடலில் ஓடுவது இரத்தந்தானே!" என்று வீராவேசத்துடன் பேசினார்.

கடைசியாக, திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளரான அண்ணாதுரை ஆற்றிய நீண்ட விரிவுரையின்போது வெளியிட்டதாவது:—

நமது மாகாண சர்க்காரில் 20 வருடகால அமுலில் இருந்து வந்த கம்யூனல் ஜீ. ஓ. ஜொலிக்கும் மணிகளை நமக்கு அளித்தது. திராவிட மக்கள், சந்தர்ப்பமும் சூழ்நிலையும் கிடைத்தால் எவரையும் மிஞ்சிவிடுவோம் என்பதை நிரூபித்துக் காட்டிவிட்டார்கள். இதைப் பார்த்தே, "சதிகார வர்க்கத்தினர்" வெகு காலமாக திட்டமிட்டு, ஹைகோர்ட்வரை சென்று வழக்காடி வெற்றியும் பெற்றுவிட்டனர் உங்களுக்குத் தெரியுமென்று நினைக்கிறேன்; சேலத்தில் பிராமண மாநாடு கூடிய காலத்திலேயே, கம்யூனல் ஜி. ஓ வை ஒழிக்க அவர்கள் திட்டம்போட்டு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள். அதன்படியே இன்று இரு பார்ப்பன மாணவர்களைத் தூண்டிவிட்டு அல்லாடி கிருஷ்ணசாமி அய்யரும் சீனிவாசய்யங்காரும் வழக்கில் வாதாடியிருக்கிறார்கள்.

கம்யூனல் ஜி. ஓ. பிரச்னைமீது மாணவர்களை அரசியல் கட்சிகள் பயன்படுத்திக் கொள்ளுவதாக மந்திரி கோபால்ரெட்டி சொல்லுகிறார். கல்விமந்திரி மாதவமேனனோ மாணவர்களின் கடமை படிப்புஎன்கிறார்.

திராவிட இயக்கத்தினர் வசமாகிவிடாதீர் என்று வெளிப்படையாகக் கூற மந்திரி விருப்பவில்லையோ அல்லது தயக்கமோ, "செந்நிறம் பூசப்பட்ட கருப்புபறவைகளும், சம்மட்டி கத்தி அடையாளம் பொறிக்கப்பட்ட பறவைகளும் உங்களைக் கொத்திக்கொண்டு போய்விடும்" என்று எச்சரித்து, அந்தப் பறவைகளிடம் மாணவர்கள் அகப்படக் கூடாதென்று, வள்ளி புள்ளினங்களை விரட்டப் பாடியதுபோல 'ஆலோலம், ஆலோலம்' என்று அதுபோலக் கூவியிருக்கிறார். கூவுதல பலனளிக்காது—பறவைகளும் ஓடிவிடாது! வேண்டுமானால் முருகன் வந்து முளைத்ததுபோலப் புதுப் பிரச்னை வேண்டுமானால் வந்து சேரும்!!

மந்திரி மாதவ மேனனுக்கு இன்னொன்றும் கூறவிரும்புகிறேன். இந்தப் பறவைகளை கூண்டில் அடைக்கும்வரை கொட்டமடிக்கும்! சிறையில் அடைத்து வைத்து பின் வெளி வந்தாலும் அவை இரு மடங்கு தெம்புடன் ஆர்ப்பரித்து கொட்டமடிக்கும். அடைக்கப் போதுமான துணிசசலோ அல்லது சிறைச்சாலை வசதிகளோ உங்களுக்கில்லை; சுட்டுக் கொன்றே ஒழித்துவிடுவோம் என்பதற்கு துப்பாக்கிகளும் இல்லை! ஆகவே, வீணைசையோ வெட்டிப் பேச்சோ வேண்டாம்; விவேகம் பிறக்கட்டும்.

பிராமண சமூகத்துக்கு ஹைகோர்ட் தீர்ப்புமூலமாக அல்லாடியும் சீனிவாசய்யரும், தற்போதைக்கு உதவியிருக்கிறார்கள். எனினும், எதிர்காலத்தில் அவர்களது இந்த சேவை பார்ப்பனீயத்தின்மீது விரோதம் மூட்டிவிட இப்போதே நிலத்தை உழுது விதை தூவப்பட்டதாக இருக்கிறது.

ரோம், கிரேக்க நாட்டு சரித்திரங்களைப் படிக்கிறோம். சமுதாய மக்கள் கொந்தளித்துப் புரட்சி செய்து சர்க்காரையே மாற்றியிருக்கிறார்கள். நம் நாட்டில் அன்பு ஆட்சி செய்யவும் எதிர்காலம் பயங்கரமாகதிருக்கவுமே நாம் விரும்புகிறோம்.

திருச்சியில் மாபெருங் கூட்டம் : கண்கொள்ளாக் காட்சி

உண்மையாக நாணயமும் மக்கள் நலனில் அக்கறையுமிருந்தால் சர்க்கார் வழக்கை சுப்ரீம் கோர்ட்டுக்கு கொண்டு செல்லவேண்டும். சுப்ரீம் கோர்ட்டிலும் ஒருக்கால் நமக்குச் சாதகம் கிடைக்கவில்லையானால், இந்த இழிநிலைமைக்குக் காரணமான இந்திய அரசியலமைப்பு சட்டத்தையே திருத்துவோம்.

பண்டித நேரு, ராஜேந்திர பிரசாத் முதலிய தலைவர்களையும் நம் மந்திரிகள் அடிக் கேட்க வேண்டும். அவர்களிடமும்

"இல்லை, முடியாது" என்று பதில் கிடைத்து விடுமாயின், மந்திரிகள் "பதவி சிறிது, தன்மானம் பெரிது" என்று கருதி உடனே ராஜினாமா செய்துவிட்டு இதே கம்யூனல் ஜி. ஓ. வையே பிரச்னையாக வைத்துக்கொண்டு தேர்தலுக்கு நிற்கவேண்டும். இப்போதே வேண்டுமானாலும் அவர்களுக்கு உறுதி கூறுகிறேன். கம்யூனல் ஜி. ஓ. பிரச்னைமீது அவர்கள் ராஜினாமாசெய்து தேர்தலுக்கு நிற்பார்களானால், திராவிட இயக்கத்தின் பேரால் சொல்லுகிறேன் — நாங்கள் ஒருவரையும் போட்டியாக நிறுத்திவைப்பதில்லை!

கல்வித் துறையில் தகுதி திறமை என்பது கபோதித்தனமாகும். மார்க்கு வாங்கும் மாணவர்களும் பெற்றோர்களும் [illegible] முடிவுற்றதும் அலைந்து திரிவது சொல்லும் [illegible] தெரியாதா? சி. ஐ. டி. கள் மூலமாவ[illegible] அவர்களது உறவினர்கள் பரீட்சைத் தாள்களைத் திருத்துவோரின் இடம் தெரிவிப்பதும் அறிந்தது தானே! அப்படிப்பட்ட பித்தலாட்ட மார்க்குகள் தகுதி திறமையை நிர்ணயிப்பது எப்படி? [illegible] லட்சணம் சொல்ல வேண்டியதி[illegible] காலின் அகலம், நீளம், கங்கை நதியின் [illegible] முதலியவைகள் கேட்கப்படுகின்றன [illegible] திறமையும் மார்க்குகளினால் [illegible] நிர்ணயிப்பதென்றால் ஜி. ஓ பிரகாரம் பல பார்ப்பனர்களல்லாதார் என்ஜினீயர்களாக இருக்கிறார்களே. அவர்கள் நிர்மாணித்த பாலங்கள் இடிந்து போயினவா? பார்ப்பனரல்லாத டாக்டர்கள் [illegible] கொடுக்கும் இஞ்செக்ஷன் நோயாளியின் [illegible] உள் பலனைச் செலுத்தவில்லையா? [illegible] மார்க்குகள் வாங்கிய குமாஸ்தாவுக்கு மார்க்குகளால் ஏற்பட்ட பயன் என்ன? மார்க்குகளா [illegible] திறமையை நிர்ணயிக்கும்? சந்தர்ப்பம் கிடைத்தால் திராவிடர்கள் எந்த அளவுக்கும் தகுதி திறமையைப் பெறுவார்கள் என்பது நிச்சயம். [illegible] தகுதி திறமை உடையவர்கள் [illegible] இல்லையா? ஆர். கே. சண்முகம் [illegible], நிதி பொருளாதாரத் துறையில் மகா நிபுணர்; அவருடன் போட்டியிட யாரால் முடியும்? ஆனால் நம் மந்திரிகளோ எதற்கு தகுதி திறமை கொண்டிருக்கிறார்களோ அந்த வேலையில் அவர்களில்லை. நிறைய கல்வித் தகுதியம்சம் இல்லாதவர் கல்வி மந்திரி. பணத்தைச் செலவிடவே தெரியும் சீமான் வீட்டுப்பிள்ளை நிதிமந்திரி எங்கே தகுதி திறமை?

உதாரணமாக பெயில்வே இலாகாவில் உதவி மந்திரியாக இருக்கும் சந்தானமய்யங்கார் சந்தர்ப்பத்தைத் தவறவிட்டவர்; பெயில்வே இலாகாவில் தன் திறமையைக் காட்டாமல் ஆஸ்பத்திரிக்கு நிறைய வேலை கொடுத்து அங்கே தன் திறமையைக் காட்டுகிறார்! அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர்தான் யார்? தேசபக்தர்களுக்கு, குலசேகரப்பட்டணம் வழக்கில் தூக்குத்தண்டனை வரக் காரணமாயிருந்தவர்! கோபாலசாமி அய்யங்கார், யார்? காஷ்மீர் பிரசனை சம்பந்தமாக ஐக்கிய நாடுகள் சபைவரை இந்தியா சார்பாக அனுப்பப்பட்டாரே; காஷ்மீர் சிங்கமெனப் போற்றப்படும் ஷேக் அப்துல்லாவை சிறையிலிட்டவர். ஆக இவர்களுடைய தகுதி திறமை எல்லாம் தேசியப் போர்வையின் பேரால் இருக்கிறதே அல்லாமல், வேறில்லை.

அல்லாடியும் சீனிவாசய்யரும் தகுதி திறமை என்கிறார்களே, உலகநாடுகளில் பெரும்பான்மையினர் சிறுபான்மையினரை அடக்குவதாகவும் நசுக்குவதாகவும் குறைகூறிக் கொள்ளுவர். ஆனால் இந்த நாட்டின் விசித்திரம், சிறுபான்மையினர் பெரும்பான்மையினரை அடக்கி நசுக்கியாளப் பார்க்கிறார்கள்.

வரி கொடுப்பதன் மூலமாக நாட்டின் நிதியைப் பெருக்கியும், போர், கலவரக் காலங்களில் படைகளில் சேர்ந்து உயிரைத் துரும்பென மதித்து சமாதானத்தைக் காக்கிற பார்ப்பனரல்லாத மக்கள் 97 சதவிகிதத்தினருக்கு நீதிக் கட்சித் தலைவர்கள் பெற்றுத் தந்தத் தீர்ப்பு—வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம்.

சமத்துவம் நீதி இவை இந்திய அரசியலமைப்பில் அளிக்கப்பட்டிருக்கும் அடிப்படை உரிமைகளிற் சில. ஆனால் சமத்துவம் என்பதற்கு அரசியலமைப்பு அகராதியில் என்ன விளக்கம் தரப்பட்டிருக்கிறது?

சமீபத்தில் நமது பிரதம மந்திரி பண்டித நேரு காசி சர்வகலாசாலையில் பேசியிருப்பதை நீங்கள் பத்திரிகைகளில் படித்திருப்பீர்கள். "சமத்துவம் என்றால் அனைவருக்கும் சமமாக ஒன்றை வழங்குவது என்று அர்த்தமல்ல; குறைவாக இருப்பவர்களை மேலே கொண்டு வருவதும் அதற்கான சந்தர்ப்பங்களை அளிப்பதும்தான்" என்று அவர் கூறியிருக்கிறார்.

இது ஒரு துணைக்கண்டம். பலவகை இனத்தருக்கும் ஒரே அரசியலமைப்பு செய்யப்பட்டிருப்பதே, இந்தியா என்ற கற்பனைமீது சட்டம் வகுக்கப்பட்டிருப்பதே, ஜனநாயகத்துக்கு குழி தோண்டியதாகும். தமிழர், ஆந்திரர், வங்காளியர், பஞ்சாபி, மராட்டியர், முஸ்லிம்கள் என்று இந்த உபகண்டத்தவர் கூறிக்கொள்ளுகிறார்களே அல்லாமல் இந்தியன் என்று யாரும் சொல்லிக் கொள்ளுவதில்லை. வீண் வழக்காட வேண்டுமானால் அதற்காக இப்போது சிலர் தம்மை இந்தியர் என்று கூறலாம். ஆனால் உண்மை அது அல்ல என்பது தெளிவு. இந்த விசித்திரமான நிலைமை உலகிலே வேறெந்த நாட்டிலாவது உண்டா என்று காங்கிரஸ்காரர்களே பதில் கூறட்டும்.

திராவிட இயக்கத்தினருக்கு குறிப்பாக இன்றைய சென்னை மந்திரிகளுக்கு இது ஒரு சோதனை காலம். ஹைகோர்ட்டு அவர்கள் முகத்தில் பூசிவிட்ட கரியைத் துடைக்க ஒன்று அவர்கள் கறுப்புத் துணியின் உதவியை நாட வேண்டும். அல்லது கரி பூசிய முகத்துடன் வீட்டுக்குத் திரும்பவேண்டும். கிளர்ச்சிக்கு அல்லாடியும் சீனிவாசய்யங்காரும் அச்சாணியாக இருந்து விதையைத் தூவிவிட்டார்கள். சமுதாயக் கிளர்ச்சியும் வகுப்புத் துவேஷமும் வளராதிருக்க, கம்யூனல் ஜி. ஓ. நம் மாகாணத்துக்கு பெரிதும் தேவை.

பணக்காரனைப் பார்த்து ஏழை உறுமுகிறான்; முதலாளியைக் கண்டு பாட்டாளி வேதனைப்படுகிறான்; காரிலே செல்லுபவனைக் கண்டு பாதசாரி மனம் குன்றிப் போகிறான். மாடி வீட்டில் வாழுபவனைப் பார்த்து குடிசையில் இருப்போன் மனம் புழுங்குகிறான். சமுதாயத்தில் உயர்வு தாழ்வு, வளமை வறுமை இருக்கும்வரை இந்த எண்ணங்கள் ஏற்படுவது இயல்பு. ஒரு சாதி எல்லாத் துறைகளிலும் இருப்பதைப் பார்த்தும், பேதம் நீங்கிவிட்டது என்று எப்படிக் கூறமுடியும். பாரதி பாடல்களை உரக்கப் பாடிவிட்ட அளவில் பேதங்கள் போக்கப்பட்டு விடுமா? பொறாமை அடங்கிவிடுமா, துவேஷம் மாய்ந்து விடுமா?"

"புலி"யாக மாறி பொல்லாங்கைத் தவிர்ப்போம்"

சேலம் கல்லூரி மாணவர்கள் கிளர்ச்சி

நெடுஞ்செழியன் வெற்றி முழக்கம்

"நூற்றுக்கு மூன்று பேரான ஆதிக்க ஆணவ வகுப்பினரிடம், நூற்றுக்குத் தொண்ணூற்றேழு பேராக உள்ள திராவிடப் பெருங் மக்களாகிய நாம் இதுவரையிலே நீதிகேட்டு வந்தோம்—சமூக நீதி கேட்டோம் — சமத்துவ நீதி கேட்டோம்—சம வாய்ப்பு நீதி கேட்டோம்! கிடைக்கவில்லை! ஆட்சியாளரால் கொடுக்கப்படவுமில்லை! நீதிக் கட்சியினரால் சிறிதளவே கொடுக்கப்பட்டது—அந்தச் சிறிதளவு நீதியும் இப்பொழுது சதிகாரர்களின் சூழ்ச்சியால் பலி செய்யப் பட்டுவிட்டது! திராவிடப் பெருங்குடியினம் இனிமேல் எலியாக இருந்து நீதி கேட்கப் போவதில்லை, புலியாக மாறி நீதி வழங்கப் போகிறார்கள்,—பொல்லாங்கைத் தவிர்க்கப் போகிறார்கள் நூற்றுக்கு மூவரான ஆதிக்க வகுப்பினர்க்கு எல்லா வாய்ப்புகளிலும் மூன்றே மூன்றுதான் என்று! வெற்றி பெற்றே தீருவோம் — இனி வீழ்ச்சியில்லை! அந்த உண்மையை உறுதிப்படுத்தும் கூட்டமே இது! அதனால்தான் வெய்யலின் கொடுமையை உடலிலே தாங்கிக்கொண்டு, வேதனையை உள்ளத்திலே தாங்கிக்கொண்டு குமுறும் எரிமலைகளாக வீற்றிருக்கிறார்கள் இங்கே மாணவத் தோழர்கள்" என்று 4—8—50 வெள்ளிக்கிழமையன்று, பகல் பன்னிரண்டு மணிக்கு, சேலம் விக்டோரியா மார்க்கட் மைதானத்தில் நடைபெற்ற மாணவர்கள் பொதுக்கூட்டத்தில், தோழர் இரா. நெடுஞ்செழியன் வீரமுழக்கம் செய்தார்.

கல்லூரி மாணவர்களும், உயர்நிலைப் பள்ளி மாணவர்களுமாக சுமார் ஈராயிரவர், இரண்டு பர்லாங் நீளமுள்ள மாபெரும் படைவரிசையாக நின்று, சேலம் முனிசிபல் கல்லூரிக் கட்டிடத்தினருகில் தொடங்கி, நகரின் பல தெருக்கள் வழியாக ஊர்வலமாகச் சுற்றி, விக்டோரியா மார்க்கட் மைதானத்தை அடைந்தனர். ஊர்வலம் செல்லச் செல்ல ஆங்காங்கு தேங்கித் தேங்கி நின்றுகொண்டிருந்த பொதுமக்கள் வெள்ளம், மாணவர்களின் ஊர்வலத்தோடு, வெள்ளத்தோடு வெள்ளம் கலப்பதுபோல் கலந்துகொண்டது. சுமார் 500 சைகிள்கள் அடங்கிய சைக்கிள் படையினர், முழக்கங்கள் பொறித்த அட்டைகளை ஏந்திய வண்ணம் முன்செல்ல, சுமார் 1500 மாணவர்கள் "அரசியல் அமைப்புச் சட்டத்தைத் திருத்து," "வகுப்புவாரி பிரதிநித்வத்தை நிலைநிறுத்து," "நாங்கள் வேண்டுவது வகுப்புவாரி முறையே" என்ற முழக்கங்களை ஒலித்துக்கொண்டும், மக்களின் கவனத்தை ஈர்க்கக்கூடிய அட்டைகளை ஏந்திக்கொண்டும் பின்னால் திரண்டு சென்றனர். இருமருங்கும் பொதுமக்கள் சூழ்ந்து சென்று மாணவர்களின் ஊக்கத்தையும், உற்சாகத்தையும், உறுதியையும் கண்டு களித்தவண்ணம் ஊர்வலத்திற்குப் பெருமை தந்தனர்.

ஊர்வலம் பகல் 12 மணிக்கு மார்க்கட் மைதானத்தை அடைந்தது. கடும் வெய்யலில் யாவரும் அமர்ந்திருக்க, கூட்டம் தொடங்கப் பெற்றது. மாணவத் தோழர் இராஜாராம் தலைமை வகித்தார். வகுப்புவாரி பிரதிநித்வ முறையைக் கல்லூரிகள் போன்ற கல்வி நிலையங்களிலும், சர்க்கார் அலுவல்களிலும் கடைப்பிடிக்க வேண்டிய அவசியத்தை வற்புறுத்தி தோழர்கள் கேசவன் (காங்கிரஸ் முனிசிபல் கவுன்சிலர்), சொக்கலிங்கம் (திராவிடர் கழகம்), குப்புசாமி (கல்லூரி மாணவர்), அ. சித்தையன் (திராவிட முன்னேற்றக் கழகம்), இரா. நெடுஞ்செழியன் (திராவிட முன்னேற்றக் கழகம்) ஆகியோர் சொற்பொழிவாற்றினர்கள்.

கட்டுப்பாடு நம் கரத்திலுள்ள வாள்!

"காலவெள்ளத்தால் கலங்காதோர், நாம்!"

கள்ளக்குறிச்சியில் சிற்றரசு முழக்கம்

"இந்தியைப்பற்றி அமைச்சர் செய்த கெடுபிடி, அதனால் ஏற்பட்ட கோவை முத்தமிழ் வளர்ச்சி மாநாட்டின் எதிரொலி, அந்த எதிரொலியின் விளைவாக கல்வி அமைச்சருக்கு ஏற்பட்ட மன மாற்றம், பிறகு அவர் போட்ட உத்தரவுகள், அதனால் நாம் அடைந்த மகிழ்ச்சி, அதற்காக அண்ணா அவர்கள் நமதியக்கத்தின் சார்பாக தெரிவித்த நன்றி—ஆக ஒவ்வொன்றாக நம்மை வெற்றிப் பாதையிலே கொண்டுபோகிறது என்றாலும், இந்த நம்பிக்கைக் கோட்டையை ஒரேயடியாக தகர்த்தெறிந்ததைப்போல இருக்கிறது. தமிழன், துடைத்த கண்களோடு, விம்மிய குரலோடு, நடுக்கமுற்ற கைகளோடு காணும்வகுப்புவாரிபிரதிநிதித்துவ வழக்கில் நமக்குக் கிடைத்த பயங்கரத் தீர்ப்பு" என்பதாக 28-7-50-ல் கள்ளக்குறிச்சியில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழகத் துவக்க விழாவில் பேசிய தோழர் சி. பி. சிற்றரசு குறிப்பிட்டார். மேற்படி கூட்டத்துக்குத் தோழர் ப. இலக்குவன், தலைமை தாங்கினார், பெருத்த கைதட்டலுக்கிடையே மேலும் சிற்றரசு பேசியதன் சுருக்கமாவது:-

"தீர்ப்பு சட்டத்தைச் சார்ந்தது, சட்டம் சர்க்காரைச் சார்ந்தது. சர்க்கார் யாரைச் சார்ந்தது என்ற கேள்வி எழும்போது சிந்தனைக் குழப்பத்தை உண்டாக்குகிறது.

வானம்பாடியும், வண்ணப் பறவைகளும், பச்சைக் கிளியும், பல சாதிப் புறாவும் வேண்டும்போது அமர்ந்து விளையாட, உண்ண, உறங்க தனித் தனி அறைகளை அமைத்துக் கட்டிய கோட்டை நம் கண்ணெதிரிலேயே, கூகைகளும் கோட்டான்களும், வௌவாலும், வஞ்சக நரிகளும் படையெடுத்து, கோட்டையைப் பாழாக்கும் நிலை கண்டு கதிகலங்கட் போவதில்லை திருஇடத்தவன்!

கால வெள்ளத்தால் ஏற்பட்ட பல சூறாவளிக்குத் தப்பி அவன் கரையைச் சேர்ந்தவன். "காலங்கருதி காத்திருப்பர், கலங்காது ஞாலங் கருதுபவர்" என்ற குறளறிந்தவன் திருஇடத்தான். மூவேந்தர் அழிந்தனர், பெருமூச்சோடு நின்றான். சங்கமழிந்தது என்றனர், சஞ்சலத்தை தன் நெஞ்சிலேயே சிறையிட்டுவிட்டான். "தமிழ்க் கொடி தாழ்ந்தது என்றனர்" இமயத்தின் புலிக்கொடியை நினைத்து, இருளடர்ந்த காட்டின் புலிபோல் சீறி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டான். "பண்டைய ஏடுகள் ஆடிப் பெருக்கில் அடித்துக் கொண்டு போகப்பட்டன" என்றனர். இதோ புது ஏடுகள் என்று இரவும் பகலுமாக எழுதி எப்படியோ அச்சேற்றி தாயகத்திற்குத் தாராளமாகத் தந்தான் தமிழன். "உங்களுள் ஒற்றுமை ஏது" என்றனர், ஏமாளிகள். ஓராண்டில் ஒரு பாதி ஆயிரம் பாசறையை அமைத்துக் காட்டினான். "நாடகம் ஆடத் தெரியுமா" என்றனர், இப்போதே பெற்றுக்கொள் இடத்தை என்றான் என் குடிப் பிறந்தான். "சினிமா" என்றனர், 'வேலைக்காரி'யைக் கேள், இல்லையானால் 'மந்திரி குமாரி'யைக் கேள் என்றான். "எது உமது நாகரீகம்" என்றனர். 'இளவரசி'யின் கையில் மின்னும் "வாள்" என்றான் வடக்கு நோக்கி நிற்கும் தென் திசையான். இன்னும் சில சந்தேகங்களைத் தெரிந்துக்கொள்ள விரும்பினால், 'ஓர் இரவு' வா, ஓய்வாகப் பேசலாம் என்றான்.

இடம் பிடிக்கும் ஆசையுமில்லை, போட்டி மனப்பான்மையுமில்லை. பொறுமை நமது இதயப் பூங்காவிலே முளைக்காத பயிர்! சிந்தனையே நமது செயலுக்கு விதை. கட்டுப்பாடே நமது கரத்திலுள்ள வாள். ஒற்றுமை எத்தனை எதிர்ப்புகளையும் துளைத்தோடும் அம்பு. கொள்கையிலே விருப்பங்கொண்டுள்ள நாம் நிலைமையை சமாளிக்க விரும்புவோம்—இதில் நமக்குக் கொஞ்சமும் அயர்ச்சி இருக்கக்கூடாது.

நமது காலத்திலேயே சீர்கெட்ட சமுதாயத்தை சீர்படுத்தி, நல்லதோர் நாடாக நானிலங் கண்டு பொறாமைப் படுமளவுக்கு செப்பனிட நாம் அனைவரும் எடுத்துக்கொள்ளும் உறுதி மொழியைப் பெறுவோமாக.

மிகத் தெளிவாக, நிதானத்தோடு, தைரியத்தைத் துணைக்கழைத்துச் செய்யவேண்டிய வேலைகள் மலைபோல் குவிந்திருக்கின்றன. அதனடிவாரத்திலே நிற்கின்றோம் நாம். ஏறமுடியாத தூரமுமல்ல, எட்ட முடியாத உச்சியுமல்ல! மனிதன் வான மண்டலத்தைக் கண்ட பிறகு, நாம் வாழ்கின்ற காலம், இருளுக்கும் ஒளிக்கும், பழைமைக்கும் புதுமைக்கும், பகுத்தறிவுக்கும், பழக்காத அறிவுக்கும், போட்டி ஏற்பட்டிருக்கின்ற காலம். இது நமது நாட்டு மக்கள் முன்னே வைத்திருக்கும் தேர்தல். இதில் தயவு தாட்சண்ணியம் என்பதற்காகவோ, அல்லது உரிமைச் சீட்டை இன்னவருக்குத்தான் போடவேண்டும் என்ற கட்டாயமோ எதுவும் இல்லை.

நமது எதிர்காலம் மிகத் தெளிவாக இருக்கின்றது. மனிதன் ஒருதரந்தான் பிறக்கின்றான், அதேபோல் ஒருதரந்தான் இறக்கின்றான். இதற்கிடையில் அவன் நல்வாழ்க்கை வாழவேண்டும்—என்ற முடிவைத் தேடித்தர எவ்வளவோ மாசற்ற இதயங்களும், மணிபோன்ற வீரர்களும் உண்டு. "நான் பிறந்த சமுதாயத்திற்கு என்னால் ஏதேனும் தொண்டு ஏற்படுக! என்ற உறுதியோடு நாம் பொதுவாழ்வுக்கு நியாயமாக செலுத்த வேண்டிய பங்கைச் செலுத்துவோமானால், நிச்சயம் வெல்லுவோம், "நீதி வெல்லும்—நிச்சயம் வெல்லும்" என்ற புத்தர் பொன்மொழிப்படி என்று கூறி முடித்தார். தோழர் குமார தணிகாசலம் நன்றிகூற கூட்டம் முடிவுற்றது.

153

இ. பி. கோ, 153ம் செக்ஷன், வகுப்புத் துவேஷம் ஊட்டுவதைக் குறிப்பதாகும்.

இந்த செக்ஷனின்படி, பார்ப்பன வகுப்பார் மீது துவேஷமும் வெறுப்புணர்ச்சியும் ஊட்டும் விதமாக எழுதியிருப்பதாக, திராவிட இயக்கத்தினர் பலர் மீது இப்போது வழக்குகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன.

பெரியார் தீட்டிய 'பொன் மொழிகள்' என்ற நூலுக்காக, அவர் மீதும், புத்தகத்தை வெளியிட்ட திராவிடமணி ஆசிரியர் தோழர் டி. எம். முத்து அவர்கள் மீதும், 153ம் செக்ஷன்படி வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

குற்றப் பத்திரிகை வாசித்தாகிவிட்டது. 12—8—50 அன்று வழக்கு மீண்டும் விசாரிக்கப்படும்.

தோழர்கள் ஆசைத்தம்பி, கலியபெருமாள், தங்கவேல் ஆகியோர் மீது 'காந்தியார் சாந்தியடைய' என்ற நூல் சம்பந்தமாக 153ம் செக்ஷன்படி வழக்கு நடைபெற்று தண்டனை தரப்பட்டு, அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது. விபரம் அன்பர்கள் சின்னாட்களுக்கு முன்பு படித்ததே.

சென்னையில், விபாழன் என்ற புனைபெயருடன் புலவர் செல்வராஜ், எழுதிய கருப்புச் சட்டை ஒழியவேண்டுமா? என்ற நூல் சம்பந்தமாக 153ம் செக்ஷன்படி வழக்கு தொடரப்பட்டு குற்றப்பத்திரிகை படிக்கப்பட்டிருக்கிறது.

குளித்தலைத் தோழர் பிச்சமூர்த்தி என்பவர் தீட்டிய 'கோட்சே கூட்டம்' என்ற நூல் சம்பந்தமாக 153ம் செக்ஷன்படி வழக்கு தொடரப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

தூத்துக்குடியில் தோழர்கள் தங்கப்பழம், சிவசாமி ஆகியோர் தீட்டிய சவுக்கடி என்ற நூல் சம்பந்தமாக 153ம் செக்ஷன்படி வழக்கு தொடரப்பட்டிருக்கிறது.

கடவுள் சொத்து களவு!

கோயில் 'பெருச்சாளி' கைது!!

பல கோயில்களில் திருட்டுகள் நடைபெறுவதாகச் செய்திகள் வந்து கொண்டுள்ளன, தினசரி, நாட்டின் பலவிடங்களிலிருந்தும். அம்மனின் வைரத்தோடும், ஐயனின் ஆபரணாதி வகைகளும் கண் காணாமல் மறைந்து விடுவதாகவும் போலீசார் தேடி வருவதாகவும், செய்திகள் தெரிவிக்கின்றன. இப்போது ஒரு புதுச் செய்தி நமக்கு கிடைத்திருக்கிறது.

காஞ்சிபுரத்துக்கு அருகிலுள்ள அய்யம் பேட்டை என்ற ஊரிலிருக்கும் கந்தசாமி கோயிலில் சில நாட்களுக்கு முன் ஐயனுக்கும் அம்மனுக்கும் பூட்டி அணிவிக்கப்படும் ஆபரண வகைகள் திடீரெனக் களவு போய்விட்டதாம். மொத்த மதிப்பு சுமார் ஐயாயிரம் ரூபாயிருக்குமாம், 'கோயில் நகைகள் போய்விட்டனவே என்று துடித்த ஊர் வாசிகளுக்குத் திடீரென ஒரு எண்ணம் எழும்பி ஐயனிடமும் அம்மனிடமும் அனுதினமும் சென்று பழகி, அர்ச்சனை நடாத்தும் கோயில் குருக்கள் வீட்டைச் சோதனையிட்டனராம், போலீசார் துணையுடன். அர்ச்சகர் இல்லத்தில் வாசனை வகைச் சரக்குகளும், புதுப் புது புடவை வேட்டிகளும், ரொக்கப் பணமும் இருந்ததும், அதன் பேரில் மேற்கொண்டு விசாரணை செய்தனராம் அதன் விளைவாககோயில் சொத்து பறிபோனதற்கு குருக்களே காரணம் என்று தோன்றியபடியால், அந்தக் குருக்களையும் அவர் சகோதரரையும் கைது செய்துள்ளனராம்.

✻

இராமநாதபுர மாவட்டம்

முன்னேற்றக் கழக முதல் மாநாடு

சிவகெங்கை: இராமநாதபுர மாவட்டம் திராவிட முன்னேற்றக் கழக முதலாவது மாநாடு, இங்கு, 30—9—50; 1—10—50 சனி ஞாயறு தேதிகளில் நடைபெறும். தோழர் என். வி நடராசன், தலைமை வகிப்பார். உடுமலைத் தோழர் எம். எஸ். கனகராசன் மாநாட்டைத் துவக்கி வைப்பார். பொதுச் செயலாளர் அண்ணாதுரையும், கவிஞர் பாரதிதாசனும், இயக்கப் பிரச்சார வீரர்களும் கலந்து கொள்வார்கள். அண்ணா-நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி ஆகியோரும் அவர்தம் குழுவினரும் நடிக்கும் பிரச்சார நாடகமும் நடைபெறும்.

"ஆரியமாயை"-வழக்கு விசாரணை

ஆசிரியர்-வெளியிட்டோர்மீது குற்றப் பத்திரிகை

14-8-50ல் மீண்டும் விசாரணை

"ஆரியமாயை" என்ற நூல் எழுதியதற்காக CNA மீதும் வெளியிட்டதற்காக திராவிடப் பண்ணை, தோழர் கண்ணப்பன் மீதும் தொடரப்பட்டுள்ள 153 A செக்ஷன்படி வழக்கு, 5-8-50 அன்று திருச்சியில் நடைபெற்றது. புத்தகம் அச்சிட்ட அச்சகத்துக் கணக்கரின் சாட்சியம் விசாரிக்கப்பட்டு வழக்கு 7ந் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

7—8—50 அன்று பிற்பகல் 3 மணிக்கு வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது

CNA, கண்ணப்பன் ஆகிய இருவர் மீதும் 153 A செக்ஷன்படி குற்றப்பத்திரிகை படிக்கப்பட்டது.

இருவரும் தாங்கள் குற்றவாளிகளல்ல என்று வாக்குமூலம் தந்தனர்.

வழக்கு 14—8—50க்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

வழக்கறிஞர் கைலைஆனந்தர் தோழர் கண்ணப்பா சார்பில் ஆஜராகி இருந்தார்.

★ சமநீதிக் கிளர்ச்சி: நமது எண்ணம் ★

கம்யூனல் ஜி. ஓ. சம்பந்தமாக நாட்டில் பரபரப்பும் மன எழுச்சியும் கலந்ததோர் உணர்ச்சி பொங்கிக் கொண்டிருக்கிறது.

திராவிடச் சமுதாயத்துக்கு மிகவும் நெருக்கடியான நேரம் இது என்பது பலராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

மாணவர் உலகு, மனக் குமுறலுடன் இந்தப் பிரச்னையில் கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறது.

அமைச்சர்கள் தங்கள் எதிர்கால வேலைத் திட்டம் என்ன என்பதைத் திட்டவட்டமாகக் கூருமல், மழுப்பிக் கொண்டிருக்கிருர்கள்.

காங்கிரஸ் தலைவர்கள் பலருக்கும் இந்தப் பிரச்னை புதியதோர் சோதனையாகிவிட்டது.

கல்வித் துறையினர், சமூக நீதிக்குக் குந்தகம் ஏற்பட்டுவிட்டது கண்டு மனம் கலங்குகிருர்கள்.

பொதுமக்கள் தங்கள் சிருர்களின் எதிர்கால வாழ்வுக்கு ஏற்பட இருக்கும் பேராபத்தை எண்ணி ஏக்கமடைகிருர்கள்.

பொதுப் பிரச்னையாக இந்தக் கம்யூனல் ஜி. ஓ. விஷயம் இருக்கிறது. எந்த ஒரு கட்சிக்குமட்டுமே சொந்தமான பிரச்னையாக இது இல்லை—இருப்பதும் நல்லதல்ல.

கூட்டு முயற்சி மூலமாகத்தான் இந்த நெருக்கடியைத் தவிர்க்க முடியும் என்ற கருத்து எங்கும் பரவி இருக்கிறது.

தனி அமைப்பு என்று ஏற்படுத்தி இந்தக் கம்யூனல் ஜி. ஓ. சம்பந்தமாக ஒத்த கருத்துக் கொண்டவர்கள் எந்தெந்தக் கட்சிகளில் இருந்தாலும் அழைத்து அவர்கள் மூலம், பொதுவான திட்டம் தயாரித்து வெற்றி காண முற்படுவது ஒரு சிறந்த வழி. ஏனெனில், காங்கிரசைச் சேர்ந்த திரு ராதாகிருஷ்ணப் பிள்ளையும், பார்ப்பனரல்லாதார் இயக்கத்தின் தனிமணியாக உள்ள டாக்டர் கிருஷ்ணசாமியும், திராவிட நாடு பிரியத்தான் வேண்டும் என்று கூறும் முன்னுள் அமைச்சர் முத்தையாவும், அது என்ன, திராவிட நாடு? என்று கேட்கும் பி. டி. ராஜனும், அரசியல் கட்சியினைச் சாராத டாக்டர் லட்சுமணசாமியும், லீக் தலைவர் இஸ்மாயிலும், பேராசிரியர்கள் பலரும், கம்யூனல் ஜி. ஓ. பிரச்னையில் ஒத்த கருத்துக் கொண்டுள்ளனர். அவர்களுக்கு இந்தப் பிரச்னையில் அக்கறை இருப்பதால் அவர்கள், எந்தத் தனிப்பட்ட அரசியல் கட்சியேனும் காரியமாற்ற முன்வந்தால், அதிலே வந்து கலந்து விடுவார்கள் என்று எதிர்பார்ப்பது பயனில்லை. அவர்களின் துணை வேண்டும் என்ருல், புதிய, பொதுவான தனி அமைப்புத் தேவை.

வேறு வழிதான் சிறந்தது, பொதுவான, புதிய, தனியான அமைப்புக் கூடாது என்று எண்ணினுல், ஒவ்வொரு கட்சியும், ஸ்தாபனமும் தனித்தனியே, தத்தமது சக்தி, இயல்புக்கு ஏற்ற படி, கம்யூனல் ஜி. ஓ. சம்பந்தமாகப் பணியாற்றிக் கொண்டிருந்துவிட்டு, நாட்டிலே பலவிதமான முயற்சிகளாலும், பொதுவானதோர் பலன் ஏற்படட்டும் என்று இருந்துவிட வேண்டியதுதான்.

முன்னேற்றக் கழகம் புதிய, பொதுவான, தனி அமைப்பு உண்டாக்கி அதன் மூலம், பல திறப்பட்ட கட்சியினரின் கூட்டு முயற்சியைப் பெற்று கம்யூனல் ஜி. ஓ. சம்பந்தமான கிளர்ச்சியை வெற்றிகரமாகச் செய்யவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துகிறது.

பொது அமைப்பு ஏற்படுத்துவது தத்தமது தனி அமைப்புகளுக்குப் பெருமை தருவதாகாது என்று சிலர் கருதக்கூடும். வேறு சிலர், கிளர்ச்சி வலுவாகக் கூடியது; பிரச்னை முக்கியமானது; யாவையும் ஈர்க்கக்கூடியது, எனவே இதனை நாமே முன்னின்று நடத்துவதுதான் நமது தனி அமைப்புக்குப் பலன் தரும் என்று எண்ணக்கூடும். முன்னேற்றக்கழகம், இத்தகைய எண்ணம் கொண்டதல்ல. பொதுவான அமைப்புதான் இந்தப் புதிய நெருக்கடியைப் போக்கும் சிறந்த வழி என்று கருதுகிறது. இது போலக் கருதுவோரின் எண்ணத்தை அறிய விழைகிறது. பெரும்பாலானவர்கள், பொதுவான புதிய அமைப்புக்கு ஆதரவாக உள்ளனர் என்று தெரிந்தால், முன்னேற்றக் கழகம், உவகையுடன், உள்ளத் தூய்மையுடன் அந்தப் பொது அமைப்பிலே கலந்து, தன் பங்கினைச் செலுத்தத் தயாராக இருக்கிறது. அது முடியாத காரியம் என்று தெரிந்துவிட்டால், முன்னேற்றக் கழகம், தன் சக்திக்கு ஏற்ற அளவிலே, இந்தப் பிரச்னை சம்பந்தமாகப் பாடுபட்டுக் கொண்டிருக்கும்.

மூத்தையா போன்றவர்கள் இந்த முக்கியமான பிரச்னையின்போது, புதிய, பொதுவான அமைப்புக் காண முன்வரவேண்டும். தத்தமது முகாம்களுக்கு, ஆட்களை அழைத்துக் கொள்ள இதுதான் வாய்ப்பு என்ற எண்ணம், கம்யூனல் ஜி. ஓ. சம்பந்தமாக வெற்றி பெறும் வழியாகாது. நேர்மையாளர்களை சிந்திக்கவேண்டுகிறோம்.

'ஒரு' வீட்டில்

"தேக்கு — அப்பவே தெரியும் சார்! நம்ப அல்லாடி, அரசியல் நிர்ணயசபைக்கு உறுப்பினராகப் போருர்னு கேட்டதுமே — நினைச்சேன். மனுஷர், ஏதாவது, நம்பளவா திருப்திப் படறாப்பலே செய்யாமல் திரும்பமாட்டார்னு! செஞ்சே, புட்டார் பார்த்தேளோ, இப்பத்தானே விஷயம் விளங்கிறது!"

"நீங்க, எதைச் சொல்றேள்?"

"எதையா? இப்ப கம்யூனல் ஜி. ஓ கேஸ் நடந்து நம்பஜெயிக்கலே! அது விஷயமாத்தான். 29 (2) செக்ஷனைப் பார்த்தயளோ?"

"பார்த்தேன்—தெளிவா, நல்லா, விளக்கமான்னு இருக்கு"

"அதுதான் சொல்றேன் — அல்லாடின்னு என்ன லேசா?"

"இந்திய சட்டத்துக்கும் அல்லாடிக்கும் என்ன சம்பந்தம்?"

"சம்பந்தமா—அரசியல் நகல் தயாரித்தாளே, அவாளிலே இவரும் ஒருத்தர்! இவா, தயாரித்த நகலைத்தான் பின்னே பார்லிமெண்டிலே சட்டமாக்கினு!"

படித்த நண்பர்கள்.

"கொஞ்சமாவது, பெருந்தன்மை வேண்டாமோ? அரசியலை அங்கேபோய் தயாரித்து, அதிலே சட்டஷரத்தையும் புகுத்திவிட்டு, இங்கே வந்து வழக்கா—போடுவது! சேச்சே! என்ன, சார்......"

"அதிலே தாங்க, இருக்கு சூட்சமம்"

"சூட்சமம் இருக்கட்டும் சார்! பெருந்தன்மை வேண்டாமோ—அரசியலை தயாரித்தவர்—அதுவும் சூத்திரதாரிபோல இருந்து எல்லா திருத்தங்களையும் கவனித்த ஒரு ஆசாமி, நீதி மன்றம் வந்து வாதாடலாமோ?"

"வாதாடினு, என்னங்க?"

"இல்லே! சட்டஷரத்தை ஒண்ணு போட்டு வைச்சுகிட்டு அதைக்காட்டி வழக்காட அதே ஆசாமியா வர்றது—உலகம் சிரிக்காதோ! கேவலமாப் பேசுவார்களேயென்கிற எண்ணமாவது வேண்டாமோ?"

பிராமண சேவாசங்கத்தில்!

"ஓய்! பார்த்தீரோ – நம்ம சமர்த்தை. பிச்சு எடுத்தாச்சுங்காணும்—இனி பேச்சு மூச்சு விட முடியாது!"

"ஆமாமாம்! பசங்க, திகைச்சுப் போயிட்டானுங்களே — அடடா, என்ன குதியாய் குதிச்சானுவ"

"நம்மைச் சாதாரணமா நினைச்சுப்புட்டானுவ - இப்பத்தெரிஞ்சிருக்கும் நம்மவா புத்தித் திட்சணியம்!"

"நான்கூட என்னமோன்னு நினைச்சேன்-ஓய்! நீர் தீர்மானம் கொண்டுவர்றப்ப – இப்பவுல்லே தெரியுது, நீர் ஏன் தீர்மானம் கொணர்ந்தீர்னு!"

'ஏது—நம்ப மாநாட்டில், கம்யூனல் ஜி. ஓவை ஒழிக்க கோர்ட்வரைக்குப் போவது என்று பேசித் தீர்மானிச்சோமே--அதைச் சொல்றீரா?"

"அதைத்தான், ஓய்! உமக்கு ஏதாவது, இந்த சட்டஷரத்தைப்பற்றி ஏற்கனவே தெரியுமோ?"

"தெரியாமலா துணிஞ்சு பேசுவேன் — தும்பை விட்டுட்டு வாலைப் பிடிப்பாளோ! சூட்சமமா — டெல்லியிலிருந்து, நம்மளவா மூலம்—தாக்கல் கிடைச்சுது. அரசியலைத் தயாரித்த போது — அதிலே ஒரு ஷரத்து சேர்க்கப்பட்டிருப்பதா, அதான், அடிச்சுப்பேசினேன். கோர்ட்வரைக்கும் போய்ப் பார்ப்பதன்னு!"

"அடடா! என்ன புத்திக்கூர்மை — என்ன இருந்தாலும் நம்மளவா, நம்பளவாதான்!"

இரு வாலிபர்கள்.

"சூதுவேலை, இது! யாருக்குத் தெரியாது. பிராமண மாநாட்டில் தீர்மானித்துப் பேசிய போதே சொன்னேன்—'இவர்கள்' ஏதோ திட்டம் போட்டு வேலைசெய்கிறார்கள் என்பதை! யார் கேட்டார்கள்—என்னைப்பார்த்துச் சிறினர்கள்"

"ஆமாம்பா, இப்பதான் எல்லாம் புரியது! அல்லாடிபோனது – அரசியலமைப்பிலே கலந்து கொண்டது......"

"இப்ப புரிஞ்சு என்ன பிரயோஜனம்—உங்க மாமா கூடத்தான் இருந்தார் அரசியல் நிர்ணய சபையிலே என்ன செய்தார்? இதுபோன்ற ஷரத்துக்கள் பரிசிலனைக்கு வந்தபோது என்ன செய்தார்?"

"உண்மைதான்! எதிர்த்தோ அல்லது திருத்தம் கொணர்ந்தோ பார்த்திருக்கலாம். எல்லாரும் சேர்ந்து கோட்டை விட்டு விட்டார்கள்!"

"சொல்கிருய், இப்போது வேதனையோடு! ஆனால் அப்போது சிறினய்—தியாகிகளைப் பார்த்துத் தூஷிக்காதே என்ருய். தெரியாமலா, போயிருப்பார்கள் சட்டம் வகுக்க என்று கேட்டாய்"

"ஆமாம்! பட்டதும்தானே தெரிகிறது – விஷயம்! காரியத்திலே கண்ணுயிருந்து, விஷயத்தை முடிச்சு விட்டார்கள். என்செய்வது?"

"பெருமூச்சுவிட்டால் போதாது! இனிமேலாவது, இதையெல்லாம் போகி – உங்க மாமா போன்றவர்களிடம் சொல்லு. இந்த 'தீர்ப்பு' ஒரு படிப்பினையாக இருக்கட்டும். நாம் எப்படி இருந்தாலும் 'அவர்கள்' தந்திரமாக தங்கள் காரியத்தைச் சாதித்துக்கொள்வார்கள் – என்பதை எல்லோருக்கும் புரியவை! நீயும் தெரிந்துகொள்!"

சிந்திக்கத் துணைபுரியும் சிறந்த நூல்கள்

✣

கனல் தெறிக்கும் நடையில்
மு. கருணாநிதி தீட்டிய கருத்தோவியங்கள்

ஓரே முத்தம் (முழு நாடகம்)	1—4—0
தூக்கு மேடை ,,	1—4—0
வாழ முடியாதவர்கள்	0-12—0
பெரிய இடத்துப் பெண்	0—8—0
சங்கிலிச் சாமி	0—8—0
பலி பீடம் நோக்கி	0—6—0
அறப்போர்	0—3—0
கயிற்றில் தொங்கிய கணபதி	0—3—0

✣

மு த் த மி ழ் (அண்ணு)	0—6—0
கல்வியும் அரசாங்கமும் ,,	0—2—0
அவள் (தில்லை-வில்லாளன்)	0—8—0
பிருந்தாவனத்தில் (செழியன்)	0-12—0
இதய அலை (வாணன்)	0—8—0
நடன சிங்காரி	0—6—0
கண் வலை	0—6—0

வியாபாரிகளுக்கு 25% கழிவு உண்டு,
தனிப் பிரதி வேண்டுவோர், புத்தக விலைக்கு
தபால் தலைகள் அனுப்பவும்.

முன்னேற்றப் பண்ணை

Advt. 118, பிராட்வே, சென்னை 1.

கல்லூரிக் காளைகள் வீர முழக்கம்!

காஞ்சி கல்லூரியில் எழுச்சி

8—8—50 அன்று காலை காஞ்சி பச்சையப்பன் கல்லூரி மாணவர்களும், பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளி மாணவர்களும் கல்லூரி மாணவத் தோழர் கே. என். பக்கிரிசாமி தலைமையில், ஊர்வலமாகப் புறப்பட்டுச் சென்றனர். "சமநீதிவேண்டும்" "வகுப்புவாரி பிரதிநிதித்துவம் வாழ்க" என்ற முழக்கங்களுடன் மாணவத்தோழர்கள், வீரக் கர்ஜனை செய்தனர். ஊர்வலம் ஆடிசன் பேட்டைக்கருகில் நெருங்கும்போது, போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் தடுத்து, நகரில் 144 அமுலி லிருப்பதால் அனுமதி இல்லாமல் ஊர்வலம் நடத்தக்கூடாதென்று தடுத்தார். மாணவர்கள், ஆவேசத்தோடிருப்பதைக்கண்டு ஒரு தேதி குறிப்பிட்டு அனுமதி கோரினால், அன்று நடத்தத் தாம் அனுமதிப்பதாகவும் கூறியதன்பேரில் மாணவர்கள், மனச்சங்கடத்தோடு கலைந்து சென்றனர். கல்லூரியிலுள்ள மொத்தம் 54 மாணவர்களில் 6 பார்ப்பன மாணவர்கள்மட்டும் வேலை நிறுத்தத்தில் கலந்துகொள்ளவில்லை.

வகுப்புநீதி காக்க ஆர்வத்தோடு எழுந்து நிற்கும் காஞ்சி மாணவமணிகளின் எழுச்சி வேகமும் கிளர்ச்சி நோக்கமும் மிகவும் பாராட்டத்தக்கதாகும்.

ஆரணியில் உரிமைக் கிளர்ச்சி

உயர்நிலைப்பள்ளி மாணவர் உற்சாகம்

'சம்பூனல் ஜி. ஓ தாழ்த்தப்பட்டவர் நீதி' 'நம் இலட்சியக்கோட்டை இடிகிறது' 'மூலபலம் முறிவதைச் சகியோம்' என்ற முழக்கங்களோடு 8—8–50 அன்று ஆரணி உயர்நிலைப்பள்ளி மாணவர்கள், தங்கள் அதிருப்தியைக் காட்டிக்கொண்டனர். கையிலே முழக்கங்கள் பொறித்த அட்டைகளைத் தாங்கி, முன்னே நூறு சைகிள்கள் செல்ல, வெற்றிக் கர்ஜனையோடு அவர்கள் ஊர்வலமாகச் சென்ற காட்சி, எண்ணத்தையெல்லாம் கவர்ந்தது. பலதெருக்கள் வழியாக ஊர்வலமாகச் சென்றபின் கோட்டை வெளிக்கு நண்பகல் 12 மணிக்கு வந்தடைந்தனர். மேற்படி பள்ளியின் முன்னாள் தோழர் நாராயணன் தலைமையில் தோழர் எதிராஜ் உள்படபலமாணவர்கள் வகுப்புவாரி நீதி நீடிக்கவேண்டியதின் அவசியம் குறித்துப்பேசினார்கள். மாணவர்களின் கிளர்ச்சி நகரில் பெரும் பரபரப்பை உண்டுபண்ணியிருக்கிறது.

"சமநீதி வேண்டும்"

அ. நகர் மாணவர் தீர்மானம்

'நீதி பெறப் போராடத் தயங்கமாட்டோம்—மேது பங்கைக் காணிக்கையாகத்தர நாம் காத்திருக்கிறோம். ஏமாளிகளல்ல நாம் — எம் நுள்ளங்கொண்டோர்! இருப்பதையும் இழந்துவிடமாட்டோம்!" என்று சென்னை சட்டக் கல்லூரி மாணவத்தோழரான வி. வி. இளஞ்செழியன் முழக்கமிட்டார். வகுப்புநீதி குறித்துத் தங்கள் ஆவேசத்தையும் அதிருப்தியையும் காட்டிக்கொள்ளுமுகத்தான் அண்ணாமலைநகர் பல்கலைக்கழக மாணவர் சார்பில் 4—8—50 அன்று மாலை குளக்கரை அருகில் தோழர் இளஞ்செழியன் தலைமையில் கூடினர். அதுபோது வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தின் இன்றியமையாமை குறித்து தோழர் மு. அண்ணாமலை பேசுகையில் "நமது கோரிக்கை அநியாயமானதல்ல—நீதியை அடிப்படையாகக்கொண்டது எனினும் இந்த உரிமை இங்கு மறுக்கப்படுகிறது. இதைப் பொறுத்துக்கொண்டு, நம் வாழ்வைப் போசுக்கிக்கொள்ளும் போக்கை நாம் அனுமதிக்க மாட்டோம்" என்று கூறினர். மாணவ நண்பர்களான வீரமணி, கலைக்கோ, குப்புசாமி, முத்தையா, ஆகியோரும், வகுப்புவாரி முறையின் அவசியம் குறித்து விளக்கமாகப் பேசினர்.



வெய்யிலையும் பொருட்படுத்தாது கூடி நிற்கும் சேலம் கல்லூரி மாணவர்கள் (4—8—50)

கடந்த வாரம் சென்னை மாணவர் கிளர்ச்சியின்போது கடற்கரையில் நடந்த கூட்டம் மழையையும் பொருட்படுத்தவில்லை மாணவர்கள்! முன்னாள் அமைச்சர் முத்தையா, 'விடுதலை' குருசாமி, முன்னாள் மேயர் ராதாகிருஷ்ணன், சி. என். ஏ. ஆகியோர் மேடையில்.

விருதைக் கல்லூரியில் முரசு

'வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வாழ்க' 'சமநீதி வேண்டும்' என்ற முழக்கங்களோடு விருது நகர் செந்திக்குமார நாடார் கல்லூரி மாணவர்கள் 3—8—50 அன்று தங்கள் உரிமைத்தாகத்தைக் காட்டிக்கொண்டனர். வீரநிலையோடு, வெற்றி முழக்கம் அதிர சைக்கில் ஊர்வலத்தோடு, முழக்கங்கள்தாங்கிய அட்டைகளோடு அணி வகுத்துச் சென்றது, கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறையை வலியுறுத்தி, தீர்மானங்கள் செய்தனர். நகரப் பொது மைதானத்தில் மாணவர்கள் கூடி மேற்படி தீர்மானத்தை நிறைவேற்றுகையில் வகுப்புவாரிமுறை குறித்து மாணவத்தோழர்கள் ரா. சுப்பையா, சீர்மைக்கனி, சிவநாசன், ஆகியோர் சொற்பொழிவாற்றினர். மாணவரின் கிளர்ச்சியில், ஊர்ப் பெருமக்களும் உற்சாகத்தோடு கலந்துகொண்டனர்.

நடக்க இருப்பவை

சேட்டூர் அணை 14—8—50 மாலை தோழர் இரா. நெடுஞ்செழியன் சொற்பொழிவாற்றுவார்.

பெங்களூர்

20—8—50 ஞாயிறு மாலை பேல்பேட்டையில் தி. மு. க. துவக்கவிழா தோழர் சி. பி. சிற்றரசு பேசுவார்.

காளி. என். ரத்தினம் மறைந்தார்

திரைப்பட உலகில், தமது நகைச்சுவை மூலம் மக்களை மகிழ்வித்துவந்த நண்பர் காளி. என். ரத்தினம். அவர்கள் குடந்தைக்கருகிலுள்ள மலையப்பநல்லூரில் காலமானார் என்ற செய்தியைக் கேட்டு மிகவும் வருந்துகிறோம். கிராமீய நிகழ்ச்சிகளையும், பாட்டுகளையும் பாடி மக்கள் மனதைக் கவர்ந்த நடிக நண்பரின் மறைவு குறித்து,வருந்தி நிற்கும் அவரது திரைப்பட உலக நண்பர்களுக்கும், குடும்பத்தாருக்கும் நமது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

கோவில்பட்டியில்
26, 27ல் நெல்லை மாவட்ட தி. மு. க. மாநாடு

Edited Printed & Published by C N. Annadurai M A at Dravida Nadu" Press 95, Tirukkachinambi Street, Kancheepuram.